
Facial, Straightening, Bleaching,
Face Massaging, Threading.
வெலா சலூன்
Hair Dressing
Ladies & Gents
இல.8, நவீன சந்தை,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453,
021 205 4116

பக்கங்கள்: 20
விலை:20 ரூபா
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 29, திங்கட்கிழமை 12.06.2017 | கதிர் 218

### சிறீதரன் எம்.பி. விசனம்

# தான் விரித்த வலையில் முதல்வர் தானே சிக்கியுள்ள பரிதாப நிலை!



## விசாரணைக் குழு அறிக்கையின் பின்புலத்தில் அரூபக் கரங்களாம்



யாழ்ப்பாணம், ஜூன் 12

"வடக்கு மாகாண சபை அமைச்சர்களுக்கு எதிரான விசாரணைக் குழுவின் அறிக்கையின் பின்புலத்தில் நமது முதலமைச்சரை நெருக்கடிக்கு உள்ளாக்கி, பதவியிலிருந்து அகற்றத் துடிக்கும் சில சக்திகளின் அரூபக்கரங்கள் செல்வாக்குச் செலுத்திச் செயற்பட்டிருக்கின்றனவோ என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

"கடைசியாகப் பார்த்தால், முதலமைச்சர் விக்னேஸ்வரன் விசாரணைக்குழு என்ற பெயரில் தாம் விரித்த வலையில் தாமே சிக்கிக் கொள்ளும் பரிதாப நிலைமை ஏற்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது."

- இவ்வாறு கூறியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். பக்கம் 18 »

### கிளிநொச்சி - பாரதிபுரம் பாடசாலையில்
## நடக்காத பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தை நடந்ததாக விசாரணை அறிக்கையில் சித்திரிப்பு

### கிராமச் சமூகம் சீற்றம்; கொதிப்புடன் முதல்வருக்குக் கடிதம்

2015 ஆம் ஆண்டு கிளிநொச்சி - பாரதிபுரம் பாடசாலையில் மாணவி ஒருவர் அதிபரினால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார் என மாகாண அமைச்சர்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயம் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது; அபாண்டமானது அவ்வாறு ஒரு பக்கம் 18 »

## நான்கு அமைச்சர்களையுமே ஒன்றாக மாற்றுவது குறித்து முதல்வர் பரிசீலனை?

### சபை உறுப்பினர்களுடன் அவர் தனித்தனியாக கலந்தாலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 12.
வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை தொடர்பில் வடக்கு மாகாண சபையின் பல உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பின் ஒரு சில கட்சித் தலைவர்களுடன் முதல்வர் விக்னேஸ்வரன் தனித் தனியாகத் தொடர்பு கொண்டு பக்கம் 18 »

## ஜனாதிபதி இன்று யாழ். வருகை; பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில் யாழ். குடாநாட்டில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு இன்று மதியம் வரும் ஜனாதிபதி பிற்பகல் 2 மணிக்கு வடக்கு மாகாண அபிவிருத்தி பக்கம் 18 »

## கோட்டா விரைவில் கைது?



கொழும்பு, ஜூன் 12
பல்வேறு கொலைச் சம்பவங்களுடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாகத் தொடர்புபட்டுள்ளமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ள பக்கம் 18 »

### இலங்கை வம்சாவளியினரான
## தமிழ்ப் பெண் தங்கம் பிரி.தேர்தலில் வெற்றி!



கொழும்பு, ஜூன் 12
பிரித்தானியாவில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை வம்சாவளிப் பெண்ணொருவர் வெற்றியைப் பெற்றுள்ளார்.

தொழிற்கட்சி சார்பில் பிரிஸ்டல் மேற்குத் தொகுதியில் போட்டியிட்ட தங்கம் பக்கம் 18 »

## வித்தியா கொலைவழக்கு இன்று மூன்று நீதிபதிகள் ஆயத்தின் முன்

யாழ். புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய ஆயத்தின் (ட்ரயல் அட்-பார்) முன்னிலையில் இன்று முதன் முறையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைகள் இன்று பக்கம் 18 »

## இலங்கை விவகாரம் குறித்து இன்று ஜெனீவாவில் விவாதம்!

ஜெனீவா, ஜூன் 12
ஜெனீவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் இன்று இலங்கை குறித்த அறிக்கை ஒன்று தொடர்பாக விவாதிக்கப்படவுள்ளது.

நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா. சிறப்பு பக்கம் 18 »

## இன ரீதியான வன்முறைகள்; 2 மாதங்களில் 16 சம்பவங்கள்

கொழும்பு, ஜூன் 12
கடந்த இரண்டு மாதங்களில் 16 இன ரீதியான வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பக்கம் 18 »

## அமெ.ஏவுகணைப் போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகம் வருகை



கொழும்பு, ஜூன் 12
அமெரிக்க ஏவுகணைப் போர்க்கப்பலான USS Lake Erie கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள் பக்கம் 18 »

## 'செல்பி' எடுத்த சகோதரர்கள் ரயிலில் மோதுண்டு பலி!

கொழும்பு, ஜூன் 12
பம்பலபிட்டி – கொள்ளுப்பிட்டி ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்று செல்பி புகைப்படம் எடுக்க முயன்ற சகோதரர்கள் இருவர் ரயில் மோதி உயிரிழந்தனர்.

12 மற்றும் 25 வயது மதிக்கத்தக்கவர்களே பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்



இப்ப... சுறாவின்ர வலையிலை நெத்தலிகள்தான் சிக்கியிருக்குது போலை...!

## முஸ்லிம் கடைகளுக்கு தீ வைத்தவர் பொதுபல சேனவின் உறுப்பினராம்!

கொழும்பு, ஜூன் 12
மஹரகம, விஜேராம பகுதிகளில் முஸ்லிம் வர்த்தகர்களின் நான்கு கடைகளுக்குத் தீ வைத்தவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர் பொது பக்கம் 18 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# ஞானசாரரை விரைவில் கைது செய்வோம்!

## அதற்கான சகல முயற்சிகளும் இடம்பெறுகின்றன என்கிறார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த



கொழும்பு, ஜூன் 12

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைதுசெய்வதற்கான சகல முயற்சிகளும் இடம்பெற்றுவருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஞானசாரதேரரை விரைவில் தாம் கைது செய்வோம் என உறுதியளித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கலபொட அத்தே ஞானசாரதேரரைக் கைது செய்வதற்காக 4 பொலிஸ் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அவரைக் கைது செய்வதற்கான அனைத்து சட்டரீதியான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த மாதத்திலிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் இரு இஸ்லாமியப் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் சில மீது தீ மூட்டிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவை தொடர்பாக விசாரணைகளை அந்தந்த பகுதிக்குப் பொறுப்பாக உள்ள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நுகேகொட விஜேராம பகுதியில் மட்டும் 4 வர்த்தக நிலையங்களுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


மருத்துவர் ஒருவரது மகனான 32 வயதான இவர் உணவகம் ஒன்றில் தொழில் புரிந்து வருகிறார். அவர் 2014 ஆம் ஆண்டிலிருந்து பொதுபல சேனா அமைப்பில் இணைந்து இதுவரை அந்த அமைப்பின் அத்தனை செயற்பாடுகளிலும் பங்கேற்றுள்ளார். ஞானசாரதேரர் மற்றும் பொதுபல சேனாவின் பங்காளிக் குழுக்களுடனும் நெருங்கிய தொடர்பையும் கொண்டிருக்கிறார்.

ஞானசாரதேரரைக் கைது செய்ய வேண்டாம் எனக் கோரி பொரளையில் நடத்திய ஆர்ப்பாட்டத்திலும் அவர் பங்கேற்றிருந்தார். அத்துடன், திருகோணமலையில் பள்ளிவாசல் மீது நடத்திய தாக்குதல் தொடர்பில் தமிழ் இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று திருகோணமலை தந்துரே பகுதியில் புத்தர் பெருமானை அவமதிக்கும் வகையில் முக நூலில் பதிவேற்றிய முஸ்லிம் இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை யடுத்து அந்தப் பகுதியில் சிங்கள இளைஞர்கள் முஸ்லிம் மக்களின் வீடுகளைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். - என்றார். (எ)

### சிகிரியாவில் சூறையாடப்படும் தொல்பொருள்கள்



சிகிரியாவில் மரம் மற்றும் தொல்பொருள் சூறையாடல் இடம்பெற்று வருகின்றன என்று மத்திய மாகாண ஆளுநர் நிலுகா ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சிகிரிய புராதன ஸ்தானங்களில் கண்காணிப்பு சுற்றுலாவை மேற்கொண்டிருந்த அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அனைத்து தொல்பொருள் மற்றும் புராதன இடங்களைப் பாதுகாப்பதற்கு அனைத்து அரச அதிகாரிகளையும் உள்ளடக்கிய உலக உரிமங்கள் தொடர்பான குழு ஒன்று நிறுவப்பட உள்ளது. -என்றும் அவர் கூறினார். (எ)

## இன பேதத்தை ஏற்படுத்திய பொறுப்பு சிங்கள, தமிழ் அரசியல்வாதிகளுக்கே

### இவ்வாறு கூறுகிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



கொழும்பு, ஜூன் 12

இனங்களுக்கு இடையில் பேதங்களை ஏற்படுத்தியமை தொடர்பான பொறுப்பை சிங்கள மற்றும் தமிழ் அரசியல் வாதிகள் ஏற்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.


காலி மாபலகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் முன்னோக்கிய பயணத்துக்கான பொறுப்பை சிவில் சமூகம் ஏற்க வேண்டும்.

அன்றாட வாழ்க்கை தொடர்பாக மக்களுக்கு பிரச்சினைகள் இருந்தாலும் அரசியல் வாதிகளின் செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் அவதானிப்புடன் இருக்க வேண்டும்.- என்றார். (எ)

## பாகிஸ்தான் கடற்படைத் தளபதி இலங்கையில்!



பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் மொஹமட் சகாவுல்லா இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். கடற்படை கற்கைநெறியை முடித்துவிட்டு வெளியேறுவோருக்கு நடத்தும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று அவர் இலங்கை வந்துள்ளார் என்று கடற்படைப் பிரிவு அறிவித்துள்ளது. இலங்கை வந்த பாகிஸ்தான் கடற்படைத் தளபதியை இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேயகுணவர்த்தன வரவேற்றுள்ளார். (எ)

# தேசிய வீடமைப்புத் திட்டத்தில் முறைகேடு விசனம் தெரிவிக்கும் கற்பகபுரம் மக்கள்

வவுனியா, ஜூன் 12

வவுனியா, கற்பகபுரத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் வழங்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் இடம் பெறுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குடியேற்றம் செய்யப்பட்ட கற்பகபுரம் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு வீடுகள் அமைப்பதற்கு மலசலகூடத்துடனான வீடுகளுக்கு ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் மலசலகூடம் உள்ள குடும்பங்களுக்கு ஐந்து லட்சமும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், அந்த மக்களில் சிலருக்கு வீடுகளை அமைப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் 10 வருட கடன் திட்டத்தில் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டு இரு அறைகள் அமைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான சூழலில் தற்போது வழங்கப்படும் வீட்டுத்திட்டத்தில் 10 வருட கடன் திட்டத்தில் வழங்கப்பட்ட கடனை ஒரே தடவையில் கழித்து 4 லட்சம் ரூபாவாகவே வழங்கப்படுவதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

இதன் காரணமாக தாம் வீட்டுத் திட்டத்தை முழுமையாகப் பூரணப்படுத்த முடியாதுள்ளது. தமக்கு வழங்கப்பட்ட 10 வருட கடன் திட்டத்துக்கான பணத்தைப் புதிய வீட்டுத்திட்டத்தில் கழிக்காது முழுமையாக பணத்தை வழங்கும் பட்சத்தில் வீடுகளை அமைக்கக் கூடியதாக இருக்கும் என்று அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கற்பகபுரம் கிராமத்தில் வேறு ஒருவரின் காணியைக் கையகப்படுத்தியுள்ள ஒருவருக்கு காணியை உரியவரிடம் கையளிக்குமாறு பிரதேச செயலாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அந்தக் காணியில் வீடு அமைப்பதற்கும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை பணத்தை வழங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

எனவே, இது தொடர்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்கள் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-100)

## யாழ். இந்துக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கக் கூட்டம்

கொழும்பு, ஜூன் 12

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்பு) அமைப்பின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அதன் நிறைவேற்றுத்தலைவர் எம்.என்.அசோகன் தலைமையில் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் செயலாளர் கே.சுந்தரேசனுடன் 077 755 1606 என்ற தொலைபேசி ஊடாகத்தொடர்புகொள்ளமுடியும்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### வற்றாப்பளை உற்சவத்துக்காக

# திறந்துவிடப்பட்ட கேப்பாபிலவு பாதையை மீள மூடியமையினால் நேற்றுப் பதற்றம்!

முல்லைத்தீவு, ஜூன் 12

தமது கட்டுப்பாட்டில் இருந்த கேப்பாபிலவு வீதிப் பகுதியை முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பொங்கல் நிகழ்வை ஒட்டிப் பொதுமக்கள் சென்று வருவதற்கு நேற்றுக் காலை திறந்து விட்ட இராணுவத்தினர், நேற்றுப் பிற்பகல் திடீரென வீதியை மீண்டும் மூடியமையால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் விழா இன்று நடைபெறவிருக்கின்றது.

இந்த ஆலயத்துக்கு புதுக்குடியிருப்பு – வற்றாப்பளை பிரதான வீதி ஊடாகத் தடை ஏதுமின்றிப் பக்தர்கள் சென்று வர முடியாத நிலைமை உள்ளது.

இந்த வீதியைக் கேப்பாபிலவுப் பகுதியில் நீண்ட காலமாக இராணுவத்தினர் தடை செய்து மூடி வைத்திருந்தனர்.

இந்நிலையில் இன்றைய பொங்கல் உற்சவத்தை ஒட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை 11 ஆம் திகதி முதல், நாளை செவ்வாய்க்கிழமை வரை வீதியைப் பக்தர்களின் போக்குவரத்துக்குத் திறந்துவிடுமாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் படைத்தரப்புக்கு அறிவித்திருந்தார்.



இதனையடுத்து உற்சவ வேளையில் இந்த வீதி ஊடாகப் பக்தர்கள் சென்று வர முடியும் எனப் படைத் தரப்பும் அறிவித்திருந்தது.

அதன்படி பாதை நேற்றுக் காலையில் திறந்து விடப்பட்டது. அப்பாதையின் இரு மருங்கிலும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தங்களின் நிலங்களைப் பார்த்து அழுதபடி மக்கள் அந்த வீதி ஊடாகச் சென்றனர்.

தென்பகுதி பிக்கு ஒருவரும், தென்பகுதியில் இருந்து வந்த சில பொதுமக்களும் கூட அவ்வழியே ஆலயத்துக்குச் சென்றனர்.

இந் நிலையில் பாதையை நேற்றுப் பகல் படையினர் திடீரெனத் திரும்பவும் மூடினர். அதனால் ஒரு தொகை பக்தர்கள் முகாம் பகுதியில் சிக்குண்டனர். அதையடுத்து அங்கு சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது.

விடயம் அறிந்த மாவட்டச் செயலாளர் அங்கு விரைந்து வந்தார். இராணுவத்தினருடன் பேசினார். அதனையடுத்து பாதை திறந்துவிடப்பட்டது.

இன்று அப்பாதை ஊடாகப் பக்தர்கள் கோவிலுக்குச் சென்றுவர முடியும் எனக் கூறப்பட்டது. (உ)

## கொழும்பு - திருகோணமலை பஸ் மீது கல்வீச்சுத் தாக்குதல்

கொழும்பிலிருந்து திருகோணமலைநோக்கிப்பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிண்ணியா டிப்போவுக்குச் சொந்தமான பஸ் மீது நேற்றுமுன்தினம் இரவு கலேவெலப் பகுதியில் வைத்து கல்வீச்சுத்தாக்குதல்மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிண்ணியா டிப்போ பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து இரவு 10 மணிக்கு திருகோணமலை நோக்கி புறப்பட்ட பஸ் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது .

இந்தத்தாக்குதலால்எவருக்கு காயம் ஏற்படவில்லை எனவும் பஸ்ஸின் முன்பக்க கண்ணாடி சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. சாரதியின் பக்கம் கல் வீசப்பட்டிருந்தால் சாரதி பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என வும் தெரிவிக்கப்பட்டது.

## ஜூலை 13இல் பங்களாதேஷ் பயணமாகின்றார் மைத்திரி!

கண்டி, ஜூன் 12

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸினாவின் அழைப்பை ஏற்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதி அந்நாட்டுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஜூலை 16ஆம் திகதிவரை அவர் அங்கு தங்கியிருப்பார் எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்துக்கு பங்களாதேஷ் ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர் களை நிவாரண உதவியாக வழங்கியி ருந்தது.

அந்த உதவியைத் தொடர்ந்து ஜனாதிபதியைத்தனது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு பங்களாதேஷ் பிரதமர் அழைப்பு விடுத்திருக்கின்றார் என இலங்கையிலுள்ள பங்களாதேஷ் தூதுவர் ரிபல் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின்போது இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் பல கைச்சாத்திடப்படவுள்ளன எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ)



## தென்னாபிரிக்காவைத் தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறியது இந்தியா

ஓவல், ஜூன் 12

லண்டனில் நடைபெறும் சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று தென்னாபிரிக்காவை 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அரை இறுதிக்குத் தகுதி பெற்றது இந்தியா.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி முதலில் களத் தடுப்பைத் தேர்வு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 44.3 ஓவர்களில் 191 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து துவண்டது.

புவனேஸ்குமார், பும்ப்ரா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா 38 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தில் வெற்றியீட்டி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. இந்தியத் தரப்பில் தவான் 78, விராட் கோஹ்லி ஆட்ட மிழக்காமல் 76, யுவராஜ் சிங் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்த வெற்றியின் மூலம் 'பி' பிரிவில் இருந்து இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. (உ)

## புதிய அரசியல் கட்சிகள் குறித்து வியாழனன்று இறுதித் தீர்மானம்

புதிதாகப் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துள்ள அரசியல் கட்சிகள் குறித்து எதிர்வரும் வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 64 கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், புதிதாக பதிவு செய்வதற்காக 95 கட்சிகள் விண்ணப்பித்துள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் பின்னர் 16 கட்சிகள் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளன என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

### தான்...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைத் தீர்மானமாக நிறைவேற்றி முன்னெடுத்தமை தவறு, குற்றம் என்று குழு கூறியிருக்கின்றது.

அப்படித் தவறு அல்லது குற்றம் என்று குழு கூறுவதை ஏற்பதாயின், அந்தக் குற்றம் சம்பந்தப்பட்ட ஓர் அமைச்சருக்கு மட்டும் பொறுப்பானதாகி விடாது. அமைச்சரவைத் தீர்மானமாக அதனை எடுத்தநான்கு அமைச்சர்களும், முதலமைச்சரும் கூடக் குற்றவாளிகள்தாம்.

ஆக, அமைச்சர்களை விசாரிக்கவெனத் தாம் நியமித்த குழுவில் - தாம் விரித்த வலையில் – முதல்வரே சிக்கும் நிலைமை, சூழல் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்த முக்கியமான விடயம் மாகாணசபையின் இரண்டு துறைகள் சம்பந்தப்பட்டவை. ஒன்று உள்ளூராட்சிப் பிரிவு, மற்றையது - காணி அலுவல்கள் விடயம்.

இந்த இரண்டு துறையிலும் ஏகப்பட்ட முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவை முதலமைச்சரின்கீழ் வருவதால் விசாரிக்கப்படவில்லை. அவற்றை விசாரிப்பவர்கள் யார்? தவறு, குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால் பொறுப்பேற்கப் போகும் அமைச்சர் யார்?

ஆக, இத்தகைய விசாரணைக் குழு என்பது மட்டுப்படுத்தக்கூடிய ஒன்றல்ல. மட்டுப்படுத்தி விசாரிப்பதும் தவறானது.

இந்த விடயங்களில் மாகாணக் கணக்காய்வுப் பிரிவுகள் இருக்கின்றன. மத்திய கணக்காய்வுப்பிரிவுகள்இயங்குகின்றன.

அவை மூலம் விசாரணை செய்யலாம்; செய்திருக்கலாம்.

அப்படிச் செய்யாமல் முதல்வர் ஒரு விசாரணைக்குழு என்று ஒருவலையை விரித்திருக்கின்றார்.

அதில் ஓர் அமைச்சரோ, இரண்டு அமைச்சர்களோ விழுவதுடன் வலை அகன்று விடாது. முழு அமைச்சரவையுமே அநாவசியமாகச் சிக்கிக் கொள்ளும் அபத்த நிலை ஏற்படும்.

எப்படியும் இந்த முதல்வரை அகற்றிவிடவேண்டும் எனக் கங்கணம் கட்டிச் செயற்படும் தரப்புகளுக்குத் தமது நடவடிக்கை மூலம் வாய்ப்பளித்திருக்கின்றார் முதல்வர்.

இந்தக் குழுவை அந்த அரூபக் கரங்கள் மறைமுகமாகக் கையாண்டிருக்கின்றன.

அமைச்சர்களுக்கு என்று முதல்வர் விரித்த வலையை அவருக்கும் சேர்த்த வலையாக மாற்றியிருக்கின்றன அந்தத் தரப்புகள். தமது அரூபக் கரங்களைக் கையாண்டு முதல்வர் நியமித்த குழுவை தந்திரோபாயமாகப் பயன்படுத்தியிருக்கின்றன அந்தத் தரப்புகள்.

இந்தக் குழுவின் முறையற்ற அறிக்கையில் தங்கி முதல்வர் செயற்பட முனைந்தால் அந்த அறிக்கையிலேயே அடுத்த மூன்று மாதங்களில் முதல்வரும் சறுக்கி விழும் நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுதற்கில்லை. – என்றார் சிறிதரன். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## என்ன செய்யப் போகிறார் மைத்திரி?

ஐ.தே.கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்து அமைத்துள்ள நல்லாட்சி அரசுக்கான இரண்டு வருட கால இணக்க உடன்பாடு எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துடன் முடிவடைகின்றது.

எனினும், தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் வரை - 2020 ஒகஸ்ட் வரை - அதை நீடிப்பது என்று சு.கவின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஐ.தே.கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தங்களுக்குள் இணங்கியிருக்கின்றனர்.

எனினும், இந்த முடிவுக்கு எதிராக சு.கவின் அமைச்சர் அணி ஒன்று தமக்குள் ஒன்று திரண்டு போர்க் கொடி தூக்கியிருப்பதாக இப்போது செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்தும் -

ஐ.தே.கட்சியுடன் இணைந்து புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் இருந்தும் -

சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என்று அந்த அணி வற்புறுத்தியிருக்கின்றதாம்.

நல்லாட்சி அரசிலிருந்து வெளியேறி புதிய பொதுத் தேர்தலை முற்கூட்டியே நடத்துவதன் மூலம், மீண்டும் சுதந்திரக் கட்சி தனித்து ஆட்சி அமைக்க முடியும் என்று அந்த அணி கருதுவதாகவும் கூறப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான உள்வீட்டு எழுச்சியாகவே - அல்லது உட்கட்சிக் குழப்பமாகவே - இதனைப் பார்க்க வேண்டி உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன, தமது சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடவில்லை. மாறாக, அந்தக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளரான அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளராகவே அவர் களமிறங்கினார்.

அவரது சுதந்திரக் கட்சியின் வாக்குகளில் ஐந்து வீதம்கூட அந்தத் தேர்தலில் அவருக்கு கிடைத்தாகத் தெரியவில்லை. அவையெல்லாம், மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னாலேயே ஒன்று திரண்டன.

ஆனால், முழு ஐக்கிய தேசியக் கட்சியினரும் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களும் - தமிழரும், முஸ்லிம்களும் - ஒன்று சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கினர்.

அரசியலில் மிகப் பலம் வாய்ந்தவரெனக் கருதப்பட்ட - அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அச்சமயம் எதிர்த்து நின்று தோற்கடிப்பதென்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத விடயமாக இருந்தது.

அதனைச் சாதித்துக் காட்டியவர்கள் - செய்து தந்தவர்கள் - இன்று சு.கவில் போர்க்கொடி தூக்கிநிற்கும் அமைச்சர்கள் அல்லர். அவர்கள் அன்று மைத்திரிபால சிறிசேனவை அரசியலில் இருந்தே முற்றாக ஒழித்துக்கட்டும் முயற்சிக்காக மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து, அவருக்குப் பக்க பலமாகச் செயற்பட்டவர்கள்.

எதிரணியினரின் ஒன்றுபட்ட ஆதரவால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிவாகை சூடி, ஜனாதிபதி பதவியைப் பெற்றுக்கொண்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு அதன் பயனாகக் கிடைத்ததுதான் சு.கவின் தலைமைப் பதவி.

இப்போது அந்த சு.க. தலைமைப் பதவியை வைத்தே மைத்திரிபால சிறிசேனவை நல்லாட்சி அரசிலிருந்து வெளியேற்றி, தனிமைப்படுத்தி, மீண்டும் மஹிந்தராஜபக்ஷவின் கையை ஓங்கச் செய்து, அவரின் ஆட்சியை மலரச் செய்வதற்குத் திட்டம் தீட்டுகின்றது இந்த அமைச்சர்கள் குழு.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து, தேர்தல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் அதிகாரத்தைப் பரவலாக்கி, இவற்றுக்கு ஏற்றவாறு அரசமைப்பை மாற்றியமைப்பேன் என உறுதியளித்தே, ஆட்சிப்பீடத்துக்கு வந்தார் மைத்திரிபால சிறிசேன.

அந்த ஆட்சிப் பீடத்துக்கு - ஜனாதிபதி அதிகாரத்துக்கு - அவர் வந்தமையால்தான் சு.க. தலைமைப் பதவி அவருக்குக் கிட்டியது.

இப்போது அந்தத் தலைமைப் பதவியைக் கையில் வைத்துக் கொண்டு, தமது அந்தக் கட்சியினர் வற்புறுத்துகின்றார்கள் என்று காட்டி, நிறைவேற்று அதிகார ஆட்சி முறைமையை மாற்றவும், அதிகாரப் பரவலாக்கலுக்கு வழிசெய்யும் அரசமைப்புச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தவும் பின்னடிக்கின்றார் அவர்.

கட்சித் தலைமையையும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியையும் ஒருங்குசேர வைத்திருக்கும் மைத்திரிபால சிறிசேனவால் தனது கட்சியினரை - தனது கட்சியின் அமைச்சர்களை - ஒருங்குபடுத்தி, கட்டுப்படுத்தி, தமது வழிப்படுத்தலில் செயற்படக் கூடியவர்களாக வைத்திருக்கத் தெரியாவிட்டால் அல்லது முடியாவிட்டால் அவரின் தலைமைத்துவத்துக்கு அது இழுக்கன்றி வேறில்லை.

கட்டுக்கோப்பானதாகத் தமது கட்சியை வழிநடத்த முடியாதவர் தலைமைத்துவத்தை இழப்பது தவிர்க்கமுடியாததாகிப் போகும்.

மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றிவிடுவார், மீளவும் அதிகாரத்துக்கு வந்துவிடுவார் என்றெல்லாம் தினசரி அஞ்சி, அஞ்சி எல்லா விடயங்களையும் கையாள முயல்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நாட்டின் நலன், எதிர்காலம் கருதி தெளிவாகவும், திடமாகவும், உறுதியாகவும், துணிச்சலாகவும் முடிவெடுத்து, தீர்க்கதரிசனத்துடன் நடப்பதை விடுத்து, உட்கட்சி அச்சுறுத்தலுக்கு அவர் ஆட்படுவாராயின் அவரின் அரசியல் எதிர்காலம் சூனியமாவது தவிர்க்க முடியாததாகும்.

# மருத்துவபீடத்துக்கு மேலும் 100 பேருக்கு இனிச் சந்தர்ப்பம்!

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

பல்கலைக்கழகங்களில் இந்த வருடம் தொடக்கம் மருத்துவ பீடத்துக்கு மேலும் 100 பேர் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இதற்கமைவாக வைத்திய பீடத்துக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 440 ஆக அதிகரிக்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வருடத்தில் ஆயிரத்து 340 பேர் வைத்திய பீடத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அரச பல்கலைக்கழகங்களில் வைத்திய பீடங்களுக்கு 50 மாணவர்களும், கொத்தலாவல பாதுகாப்பு வைத்திய பீடத்துக்கு 50 மாணவர்களும் இவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட உள்ளனர்.

கொத்தலாவல வைத்திய பீடத்துக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை நாடு முழுவதிலும் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையிலேயே இடம் பெறும். ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்று வைத்திய பீடங்களுக்கு அனுமதி பெற முடியாத மாணவர்கள் தாதியர் ஆவதற்கான சந்தர்ப்பமாகும்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் புதிதாக வைத்திய பீடம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும்.

வயம்ப பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படும் வைத்திய பீடத்துக்கு 100 மாணவர்கள் அடுத்த வருடம் முதல் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட உள்ள வைத்திய பீடத்துக்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து 100 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

2016-2017 கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்துக்கு மேற்பட்டதாகும்.- என்றார். (எ)

# மாகாணசபைத்தேர்தலை ஒத்திவைப்பதாயின் மக்கள் கருத்துக்கணிப்பு அவசியம்!

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

உரிய பதவிக் காலம் முடிவுற்ற மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதைத் தடுப்பதாயின், அதற்கு மக்கள் கருத்துக் கணிப்பு அல்லது நீதிமன்றத் தீர்ப்பு அவசியம். அத்தகைய ஒரு ஏற்பாட்டின் மூலம் மட்டுமே அதனைச் செய்யமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சில மாகாண சபைகளின் ஆயுள்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைந்ததும், புதிய தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்படும். அதன் பின்னர் தேர்தல்கள் பிற்போடப்படமாட்டா.

சட்டவாக்க சபையின் தற்போதைய கட்டளைகள் மற்றும் அரசமைப்புக்கு அமைய, மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாதிருக்க வேண்டுமானால், மக்கள்கருத்துக்கணிப்பு அல்லது நீதிமன்றத் தீர்ப்பொன்றினூடாக மட்டுமே அதனைச் செய்யமுடியும். வேறெந்த நடவடிக்கையினூடாகவும் அதனைச் செய்யமுடியாது .

வாக்காளர் பதிவுப் பட்டியலைத் தயாரிப்பதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக, வாக்காளர் பதிவுப் பட்டியலைத் தயாரிக்கும் பணிகள் அடுத்தமாதம் 31 ஆம் திகதிவரை இடம்பெற உள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக உரிய மாவட்ட செயலகங்களின் பரிந்துரைகளுக்கு அமைய உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.- என்றார்.

# அற்ப பதவிகளுக்காக அடுத்தவனை வீழ்த்த நினைக்கும் கறுப்பு ஆடுகள்

## தற்போதைய சூழலிலும் இருக்கின்றன என சிறிதரன் எம்.பி.வேதனை



கிளிநொச்சி, ஜூன் 12

மத்திய அரசு வழங்கும் அற்ப பதவிகளுக்காக கூட இருந்தே குழிபறித்து, அடுத்தவனை வீழ்த்த நினைக்கின்ற சில கறுப்பு ஆடுகள் இன்றைய சூழலிலும் காணப்படுகின்றமை மிகவும் வேதனையான ஒன்று என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நா.யோகேந்திரநாதன் எழுதிய 'நீந்திக் கடந்த நெருப்பாறு' என்ற நூல் வெளியீட்டு விழாவில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒருபுறம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராடுகின்றனர். மறுபுறத்தில் சிறைகளில் உள்ளவர்கள் சிறைகளிலேயே தொடர்ந்தும் இருக்கின்றனர். மாவீரர்களாக மண்ணில் மடிந்துபோன 60 ஆயிரம் பேர் பற்றி ஒரு நாளாவது பேசத் தயாராக இல்லை. இவற்றுக்கு மத்தியில் சிலர் பதவி பற்றிச் சிந்திக்கின்றனர்.

இதேவேளை, யாரெல்லாம் 2009ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிகழ்வுகளின் நீட்சிகளைக் கொண்டுசெல்ல முயற்சிக்கின்றார்களோ அவர்கள் அரங்கிலிருந்து செல்வார்கள் என்ற செய்தியையே தற்போதைய நிகழ்வுகள் சித்திரிக்கின்றன. அந்த விடயமே இன்று பலபேரை பழிவாங்கி அனுப்பும் செய்தியாகமாறியுள்ளது.- என்றார். (எ)

நீர் வெறுப்பு நோயால் மரணம் நிச்சயம். ஆனாலும், அது தடுக்கப்படக்கூடியதே.
ஏற்பு தடுப்பு ஊசியானது விலங்கு விசர் நோயிலிருந்து பாதுகாப்புத் தராது.
எனவே, ஏற்பு ஊசி போட்டவர்களும் கடிகாயம் தொற்று அபாய நிலை இருப்பின் விலங்கு விசர் நோய் தடுப்பு ஊசியினை (ARV) தவறாது ஏற்றிக் கொள்ளல் வேண்டும்.



பாதுகாப்பான சூழலில் வளர்ப்பு நாய், பூனைகளை வளர்ப்போம்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.
யாழ்.மாநகரசபை.

## நாளை

13.06.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : உத்தராடம் பி.ப. 12.10 வரை
திதி : சதுர்த்தி பி.இ. 01.02 வரை

சுபநேரம் : 10.22 - 11.52 வரை
இராகுகாலம் : 02.52 - 04.22 வரை

# இங்கேயே கைபேசிகளுடன் நீங்கள்! சத்தம் வேறு போடுகின்றீர்கள்!!

## அதிபர்களுடனான சந்திப்பின்போது வடக்கு அமைச்சர் குருகுலராஜா



வவுனியா, ஜூன் 12

கடமை நேரத்தில் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தக் கூடாது என்று நாம் கூறியிருக்கின்றோம். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர், மாகாணசபை உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் இருக்கும் இந்தக் கூட்டத்தில் கூட துணிந்து கையடக்கத் தொலைபேசிகளை பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்கள் என்று வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

வவுனியா, புளியங்குளத்தில் அலுவலர் விடுதியைத் திறந்து வைத்த பின்னர் வவுனியா வடக்கு வலய அதிபர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியாத நிலையில் இருக்கும் ஆசிரியர்களைக் கொண்டு அனைத்துப் பாடங்களுக்கும் உரிய வகையில் பயன்படுத்தவேண்டும். அவர்கள் பயிற்சிபெற்றிருப்பின் அதனை செய்யக் கூடியவகையில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கும். அத்துடன் பாடசாலைகளில் தண்ணீர் இல்லை என்றால் 500 மீற்றர் சென்று தண்ணீர் எடுத்துவருவதற்கு நாம் என்ன செய்ய முடியும்.

வலயக்கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடி ஒருவரைதண்ணீர் எடுக்க அனுப்பி அதற்கு கொடுப்பனவை கொடுக்க மாற்று வழிகளைத் தேடவேண்டும். குறிப்பாக வடக்கு கல்வி நிலைபின் தங்கியதற்கு போரியல் தாக்கமே முக்கிய காரணம். அதற்கு கல்வியியலாளர்கள் ஆய்வு எதனையும் செய்யவில்லை. வீடு வீடாகச் சென்று தரவுகள் எடுக்கவில்லை. உங்களிடம் ஒரு தரவுகளும் இல்லை. ஆனால் எழுந்தமானமாக பல காரணங்களை நாம் சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

கடமை நேரத்தில் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தக் கூடாது என்று நாம் பலதடவை கூறியிருக்கின்றோம். ஆனால் இந்தக் கூட்டத்தில் துணிந்து கையடக்கத் தொலை பேசிகளை பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள். சத்தம் போடுகின்றீர்கள். ஆகவே வகுப்பறைகளில் என்ன நடக்கும் என்பது எமக்குத் தெரியும். பல அதிபர்கள் அதனைத்தான் செய்கின்றனர்.

பாடசாலையில் மாணவர்களுக்கு அடிக்காதீர்கள் என்றால் நீங்கள் அதையே செய்கிறீர்கள். பாலர் பிரிவில் தடியுடன் நிற்கின்றீர்கள். அவ்வாறு செய்யமுடியாது. இதற்காகவே 40 உளவள ஆசிரியர்களை பயிற்றுவித்து வலயங்களுக்கு அனுப்பியுள்ளோம். -என்றார். (எ-100)

## கச்சாய் ஆலய பெங்கல் இன்று

சாவகச்சேரி, ஜூன் 12

வரலாற்றுப் புகழ் பெற்ற கச்சாய் கண்ணகி அம்மன் ஆலய வைகாசி விசாகம் இன்று திங்கட்கிழமை காலை விசேட பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது. பல்வேறு ஆலயங்களில் இருந்தும் பக்தர்கள் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்ற காவடி, பால் செம்பு எடுத்து வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர். அத்துடன் இரவு பொங்கல் (வளந்து ) நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

பக்தர்களுக்கான போக்குவரத்து வசதிகள், வாகன தரிப்பிடங்கள், பாதுகாப்பு வசதிகள் அனைத்தும் ஆலய நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யுப்பட்டுள்ளன. அடியவர்கள் ஆலய வளாகத்திற்குள் தமிழ் பண்பாடு, கலாசாரங்களுடன் கூடிய ஆடை அணிந்து வர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-21)

## ஆலய மஹோற்சவம்

வரணி, ஜூன் 12

தென்மராட்சி வரணி வடக்கு சிமிழ் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும். (இ)

◆◆◆ ◆◆◆ ◆◆◆

காரைநகர், ஜூன் 12

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளைமறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

## அறநெறிக் கல்வி வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம்



நல்லூர் பிரதேச செயலக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்து சமய அறநெறி கல்வி வாரத்தை முன்னிட்டு இந்து சமய அறநெறிக் கல்வி ஊர்வலம் நேற்றுக் காலை இடம்பெற்றது. நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமான விழிப்புணர்வு ஊர்வலம் நல்லூர் ஆலயம் வரை சென்று அங்கு பூசை வழிபாடுகள் இடம்பெற்று மீண்டும் ஊர்வலம் நல்லூர் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

நல்லூர் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்துசமய அறநெறி கல்வி விழிப்புணர்வு ஊர்வலத்தில் இந்து சமயத்தலைவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், ஆலய தர்மகர்த்தாக்கள் விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

## அடுத்த மாதம் முதல் பஸ் கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 12

பஸ் கட்டணங்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என்று தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் இந்த விடயத்தை பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் 6.5 சதவீதமாக பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப் படும் என்று அவர் குறிப் பிட்டார். (எ)

## அரசியல் செல்வாக்குப் பெற்றோர் தூதரகங்களில் உயர் பதவிகளில்!

### வெளிவிவகார அமைச்சு பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜூன் 12

வெளிநாட்டுத் தூதுவர் காரியாலயங்களில் அரசியல் ரீதியாக செல்வாக்குப்பெற்ற 27 பேருக்கு உயர் பதவிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசிலுள்ள பிரதானிகள் தனக்கு நெருக்கமானவர்களை இந்த உயர் பதவிகளுக்கு நியமித்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வாறு நியமிக்கப் பட்டவர்களுள் பெரும்பாலானவர்கள் இரட்டைப் பிரஜாவுரிமை உடையவர்கள். வெளிநாட்டுத் தூதுவர் காரியாலயங்களில் இவ்வாறு அரசியல் ரீதியாக வேண்டப் பட்டவர்களுக்கு உயர் பதவிகளை வழங்குவதால், தூதுவர் சேவைத்துறை பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றது.

தகுதியானவர்கள் இருக்கையில், இவ்வாறு தகுதியில்லாதவர்கள் தூதரகங்களுக்கு நியமிக்கப்படுகின்றமையால் தூதரக சேவை மோசம் அடையும் நிலைமை உருவாகும். -என்றார். (எ)

## வறட்சியால் வடக்கு, கிழக்கில் ஆறரை லட்சம் மக்கள் பாதிப்பு



வறட்சியான காலநிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுமார் ஆறு லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிக வெப்பம் காரணமாக வட மாகாணத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 931 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 52 ஆயிரத்து 907 பேர் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறட்சியால் இரண்டாவதாக கிழக்கு மாகாணத்தில் 55 ஆயிரத்து 249 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 451 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

அதேவேளை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களை கொண்ட வட மேல் மாகாணத்தில் 82 ஆயிரத்து 536 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 80 ஆயிரத்து 502 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மத்திய மாகாணம் அனுராதபுர மாவட்டத்திலும் 4 ஆயிரத்து 344 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 264 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். -என்றுள்ளது. (எ)

# அரசியலில் தவறிழைத்தால் தமிழ் மக்களுக்கே பாதிப்பு!

## பிரதி அமைச்சர் அமீர் தெரிவிப்பு



தமிழ் மக்கள் அரசியலில் தொடர்ந்தும் தவறுகளைச் செய்யக்கூடாது.

-இவ்வாறு பிரதி அமைச்சர் அமீர் அலி தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் வைத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை சதொச விற்பனை நிலையக் கிளையை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 லட்சம் தமிழர் வாக்குகளில், தமிழ்க் கட்சிகள் ஒரு லட்சம் வாக்குகள் வரை தான் பெற்றன. மிகுதியான வாக்குகளுக்கு என்ன நடந்தது என்றே தெரியாது.

சுமார் 25 ஆயிரம் வாக்குகளை ஐக்கிய தேசியக்கட்சிக்கு அளித்திருந்தால் இந்த மாவட்டத்தில் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் வந்திருப்பார். அவர் ஒரு பிரதி அமைச்சராகவோ, அமைச்சராகவோ வந்து அபிவிருத்திகளைச் செய்திருப்பார். எனவேதான் அரசியலில் தொடர்ந்தும் தமிழ் மக்கள் தவறுகளைச் செய்யக் கூடாது.

அதற்காக எல்லாவற்றையும் இழக்காமல் சமகாலத்தில் அரசியலில் எதைச்செய்ய முடியுமோ அதனைச் செய்ய வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ச் சமூகம் எதனையாவது அடையமுடியும்.-என்றார். (ச)

# நாட்டில் நடந்த படுகொலைகள்; விசாரணைகள் இன்றிக் கிடப்பில்!

இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள் அனைத்தும் விசாரணைகள் இன்றிக் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் வரலாற்றை இளைய சந்ததியினருக்கு கொண்டு செல்ல வேண்டுமானால் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற படுகொலைகளை நினைவு கூர வேண்டும். மட்டக்களப்பு மகிழடித் தீவு படுகொலையின் 26 ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை (இன்று) ஆகும். ஏறத்தாழ 80 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் இதன்போது சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், ஐ.நா .மனித உரிமைகள் பேரவையில் இந்த படுகொலை தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தார். இதன்பின்னர் மேற்படி படுகொலை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று, சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. எனினும் அதற்கான தீர்வுகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. -என்றார்.(ச)

# கஞ்சாவுடன் குடும்பஸ்தர் சிக்கினார்!

திருகோணமலை சங்கமம் பகுதியில் கேரளாக் கஞ்சாவுடன் குடும்பஸ்தர் ஒருவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த 36 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

இவரிடமிருந்து பக்கெற் செய்யப்பட்ட நிலையில் 100 கிராம் கேரளாக் கஞ்சாவும், தனியாகப் வைக்கப்பட்டிருந்த 50 கிராம் கேரளாக் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபரைத் திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து, அவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

# தொடர் போராட்டத்தில் குதித்துள்ளனர் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள்!

மட்டக்களப்பு, ஜூன் 12

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஐந்தாவது நாளாகவும் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

'இறுதி இரத்தத் துளிகள் சிந்தும் வரை போராடுவோம்' எனும் முகப்பு வாசகத்தைப் பதித்துக் கொண்டு கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் தற்போது ஐந்தாவது நாளை எட்டியுள்ளது.

'கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு சரியான நேரத்தில் நிறைவு செய்யப்பட வேண்டும்', 'பல்கலைக்கழக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி. வி. கமராக்கள் அகற்றப்பட வேண்டும்', 'மஹாபொல புலமைப்பரிசில் பிரச்சினை உடனே நிவர்த்தி செய்யப்பட வேண்டும்', 'விடுதிப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்', 'அசாதாரணமான வகுப்புத் தடை நீக்கப்பட வேண்டும்'. என்பன உள்ளிட்ட ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.





ஆர்ப்பாட்டக்காரர்கள் கருத்துத் தெரிவிக்கையில்-

'கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நான்கு வருடங்களில் நிறைவு செய்யவேண்டிய பட்டப்படிப்பு ஆறு வருடங்களில் நிறைவடைகின்றது. இதனால், இரண்டு ஆண்டுகள் மேலதிகமாக வீணாக்கப்படுகின்றன. உரிய நேரத்தில் பரீட்சைகள் நடைபெற்று பெறுபேறுகளை வெளியிடுவதன் மூலம் நான்கு வருடங்களில் பட்டப்படிப்பை மாணவர்கள் பூர்த்தி செய்ய முடியும். சி.சி.ரி.வி.கமராக்கள் மூலம் மாணவர்கள் அவதானிக்கப்படுகின்றமையால், எமக்குப் போதுமான சுதந்திரம் இல்லை. அத்துடன் மாணவர்கள் நியாயமற்ற முறையில் இடைநிறுத்தப்படுகிறார்கள். மாணவர்களைப் பழி வாங்கும் நடவடிக்கைகளை நிர்வாகம் நிறுத்த வேண்டும்.'- என்றனர். (ச)

# செப்ரெம்பரில் திருமலையில் கைத்தொழில் கண்காட்சி!

திருகோணமலை மாவட்ட வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வர்த்தகக் கைத்தொழில் சந்தை எனும் மாபெரும் கண்காட்சி நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8, 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது என திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.குலதீபன் தெரிவித்தார்.

மேற்படி கண்காட்சிக்கான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தில் இடம்பெற்றது. அதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ச)

# கிழக்குப் பல்கலைக்கழகம் விவசாயத்துக்குப் போதுமான ஒத்துழைப்புத் தருவதில்லை!

## மாகாண விவசாய அமைச்சர் அதிருப்தி



மாவடியோடை, ஜூன் 12

கிழக்குப் பல்கலைக்கழகம் விவசாய நடவடிக்கைகளுக்கு போதுமான ஆதரவும், ஒத்துழைப்பும் தருவதில்லை. இனி வரும் காலங்களில் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள் விவசாய ஆராய்ச்சி நடவடிக்கையில் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

ஆற்றுப்படுக்கைகளை அண்டிய மானாவாரி நெற்காணிகளில் விதை உற்பத்தி மற்றும் வர்த்தக ரீதியிலான நிலக்கடலை உற்பத்தி என்பனவற்றின் அறுவடை விழா மாவடியோடையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் காரணமாகத் தகர்க்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி நிலையத்தை இப்போது புதிதாக அமைத்து வருகின்றோம். கிழக்குப் பல்கலைக்கழக விவசாயபீடத்தின் செயற்பாட்டுத்திறன் இதனூடாக அதிகரிக்க வேண்டும்.



மட்டக்களப்பு மாவடியோடைப் பகுதி விவசாயிகள் நெற்செய்கையில் மட்டுமல்லாது மாற்றுப் பயிர் வகைகளையும் பயிரிட்டு அமோக விளைச்சலை ஏற்படுத்தியுள்ளனர். விவசாயத்தில் பெரும் மாற்றத்தையும், புரட்சியையும் செய்து தேசிய விவசாய உற்பத்தியில் பங்குகொண்டுள்ளனர். இது ஏனைய பிரதேச விவசாயிகளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமையும்.

நமது பிரதேசத்தில் விவசாயம் என்றால் பொதுவாக நெற்செய்கையைத்தான் பெரும்பாலானோர் நினைப்பதுண்டு. ஆனால், இந்த மாவடியோடை, புத்தம்புரி விவசாயப் பிரதேசங்களில் மாற்றுப் பயிர்ச் செய்கையில் மிகப்பெரிய விவசாய புரட்சியே இடம்பெற்றுள்ளது. இங்குள்ள விவசாயிகள் நெல்லுக்குப் பதிலாக நிலக்கடலை, வற்றாளை, எள் போன்ற பயிர்களை மிகத் திறம் படப் பயிரிட்டு அமோக விளைச்சல் கண்டுள்ளனர்.

மாற்றுப் பயிர்ச் செய்கையை இன்னும் விரிவாக்குகின்ற முயற்சிகளில் எங்களுடைய மாகாண விவசாயத் திணைக்களம் மத்திய அரசின் விவசாயத் திணைக்களத்தோடு சேர்ந்து செயற்படுகின்றமை ஆரோக்கியமான விடயம்.-என்றார்.

## பிலியந்தலை சம்பவம் குறித்து மற்றும் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 12

பிலியந்தலைப் பிரதேசத்தில், பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலையில், கடந்த மே மாதம் 9ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவத்துக்கு, உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில், போதைப் பொருள் ஒழிப்புப் பொலிஸ் பிரிவின் பொலிஸ் அதிகாரியும் சிறுமி ஒருவரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# நாட்டைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பமாக அனர்த்தத்தைப் பயன்படுத்த வேண்டும்

## ஜப்பானியத் தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு,ஜூன் 12

அனர்த்தம் ஏற்படும் போது அதனை மேலும் பாதுகாப்பான நெகிழ்திறன் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்த வேண்டும் என்று இலங்கைக்கான ஜப்பானியத்தூதுவர்கெனிச்சி சுகனுமா தெரிவித்தார்.

ஜப்பானியக்குழுவெள்ளம் மற்றும் மண்சரிவுகளுக்கான காரணத்தை ஆராய்ந்துள்ள தோடு, பல திட்டங்களையும் பரிந்துரைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இலங்கையின் தென்பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவுகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட ஜப்பானிய அனர்த்த நிவாரண நிபுணர் குழு, அதன் இறுதி அறிக்கையை நேற்றுமுன்தினம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் அரச தரப்பினரிடம் கையளித்தது.

இதன் போது அரசின் சார்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ச்சன யாப்பா விடமும் நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜேயமுனி சொய்ஸா மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.அபேகோன் ஆகியோர் அறிக்கையைப் பெற்றுக் கொண்டனர், அத்துடன் ஊடக சந்திப்பு ஒன்றும் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்தபோதே ஜப்பானியத் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜப்பானியக்குழுவெள்ளம் மற்றும் மண்சரிவுகளுக்கான காரணத்தை ஆராய்ந்தது. பல திட்டங்களையும் பரிந்துரைத்தது.

அனர்த்தம் இடம் பெற்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உட்கட்டுமானங்களை மேம்படுத்துவதானது மீண்டும் சிறப்பாகக் கட்டியெழுப்புதல் என்ற கருத்திட்டத்தை மையப்படுத்தியது. இந்தக் கருத்திட்டம் ஐ.நாவின் அனர்த்த முகாமைத்துவ மாநாடுகளில் வலியுறுத் தப்படுவதாகும்.

உலகெங்கிலும் இந்தக்கருத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றது. அந்த வகையில் நாம் ஒத்துழைப்புடன் ஒவ்வொருநாடும் அனர்த்தத் தவிர்ப்பு முகாமைத்துவத்திட்டங்களில் முதலிடுவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

இதன் மூலமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல அனர்த்தங்களைத் தவிர்க்க முடியும். (எ)

# அரச போட்டிப் பரீட்சைகளுக்கு இலவச வழிகாட்டல் வகுப்புகள்

## கிளி.சமூகசேவைகள் அலுவலக மண்டபத்தில்

கிளிநொச்சி, ஜூன் 12

அரச போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கான இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் கிளிநொச்சி மாவட்ட சமூகசேவைகள் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வகுப்புகள் அனைத்தும் இன்று திங்கட்கிழமையும் நாளை மறுதினம் புதன் கிழமையும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையும் நடைபெறும் பொது உளச்சார்பு துறையில் நீண்ட கால அனுபவம் உள்ள விரிவுரையாளர் குழுவினால் மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு செய்முறை விளக்கங்களுடன் வழிகாட்டல் வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்திற்கு அருகில் அமைந்துள்ள வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்திலேயே இந்த வகுப்புக்கள் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

அரசு 2017 ஆம் ஆண்டை வறுமைஒழிப்பு ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளது அதன் கீழ் விசேட திட்டமாக அரச சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான இலவச வகுப்புக்களை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் நடத்தி வருகின்றது. (இ)

## உத்தேச அரசமைப்புக்கு எதிராகச் செயற்படுவதா?

# சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் நிமல் தலைமையில் இரகசியப் பேச்சு



உத்தேச புதிய அரசமைப்புக்கு எதிராக இணைந்து செயற்படும் நோக்கத்துடன், அமைச்சர் நிமல் சிறிபாலவின் தலைமையில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் இரகசியப் பேச்சு ஒன்றை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு எதிரான அம்சங்களுடன் உத்தேச புதிய அரச மைப்பு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுமாயின் அதற்கு அமைச்சர் நிமல் சிறிபால தலைமையில் கூட்டாகச்சேர்ந்து, எதிர்த்து வாக்களிப்பதற்கு இந்த இரகசியப் பேச்சின் போது சம்பந்தப்பட்ட சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இவ்வாறு புதிய அரசமைப்பு விடயத்தில் மாத்திரமன்றி அரசின் ஏனைய அனைத்து உத்தேச தீர்மானங்கள் தொடர்பிலும், அவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கும், நிலைப்பாடுகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அவற்றுக்கு எதிராக அமைச்சர் நிமால் சிறிபால தலைமையில் தனியான குழுவாக இயங்கி எதிர்ப்பதற்கு மேற்படி இரகசியப் பேச்சில், தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக அரசால் உத்தேச பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது, அரசுக்கு எதிராக கூட்டு எதிரணியின் உறுப்பினர்களுடன், இணைந்து செயற்படுவதற்கும், அமைச்சர் நிமால் சிறிபால தலைமையிலான இந்த சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் உறுதியாக உள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. (எ)

# 26 தேயிலைத் தொழிற்சாலைகள் இயற்கை அனர்த்தத்தால் பாதிப்பு

## தேயிலைச் சபை ஆணையாளர் தகவல்

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் 26 தேயிலைத் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

காலி, மாத்தறை மாவட்டங்களில் உள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்கே பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று தேயிலைச் சபை ஆணையாளர் ஜயந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

14 தேயிலைத் தொழிற்சாலைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. ஏனைய தொழிற்சாலைகள் மண்சரிவால் பாதிக்கப்பட்டன. இதனால் 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோ தேயிலைக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தேயிலைத் தொழிற்சாலை மற்றும் தேயிலைக்கு ஏற்பட்ட மொத்தப் பாதிப்பு சுமார் 60 கோடி ரூபாவாகும்.

பாதிக்கப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளில் 99 சதவீதமானவற்றுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்கான இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது.

இதற்கு முன்னர் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின் போது இந்தத் தொழிற்சாலைகள் பெரும்பாலானவற்றுக்கு பாதிப்பு ஏற்பட்டதால் அவற்றைப் பாதுகாப்பான இடங்களில் அமைப்பதற்கான நடவடிக்கை தொடர்பில் ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. -என்றார். (எ)

### தமது குடும்பத்தினருக்கு எதிரான

## விசாரணைகளைத் தடுக்கும் முயற்சியில் மஹிந்த ராஜபக்ஷ!

தமது குடும்பத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளைத்தடுத்து நிறுத்தும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல்வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விமான நிலைய மற்றும் விமான சேவைகளின் தலைவர் காமினி அபேரட்ண எனப் படும் டெக்ஸி அபேவின் உதவியை மஹிந்த ராஜபக்ஷ நாடியுள்ளார்.

தனது குடும்பத்துக்கு எதிரான விசாரணைகளை இடைநிறுத்துமாறு டெக்ஸி அபே ஊடாக, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவருடன் ராஜபக்ஷ தொடர்புகொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் மஹிந்த தீவிரம் காட்டி வருகின்றார் என்றுள்ளது. (எ)

# வெள்ளத்தால் டெங்கு பரவினால் அதை எதிர்கொள்வதற்குத் தயார்!

## சுகாதார அமைச்சர் ராஜித கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 12

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் டெங்கு நோய் பரவினால், அதற்கு முகம் கொடுக்கத் தயாராகவுள்ளோம் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நகரமயமாக்கல் காரணமாக டெங்கு நோய் பரவும் வீதம் அதிகரித்துள்ளது.

மேல் மாகாணத்தில் இந்த நிலைமை அதிகமாகக் காணப்படுகின்றது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக 7 கோடி ரூபா பெறுமதியான 50 லொறிகள் சுகாதார அமைச்சுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன. அவை நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (எ)

# 40 வீதமான காடுகள் அழிப்பு

## வன திணைக்களத்தை மேற்கோள் காட்டி உலக வங்கி தகவல்



கோப்புப்படம்

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் கடந்த 2 நூற்றாண்டுகளில் 40 சத வீதமான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்று வன திணைக்களத் தகவல்களை மேற்கோள்காட்டி, உலக வங்கி தெரிவித்துள்ளது.

'நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்த சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும்' என்ற தலைப்பில் உலக வங்கியின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் வறுமை தொடர்ச்சியாகக் காணப்படும் சுற்றாடல் பிரச்சினைகளில் ஒன்றாக இருந்து வருகின்றது.

உதாரணமாக நோக்குமிடத்து வாழ்வாதாரத்தைத் தேடிச் செல்கின்ற மக்கள் அடிக்கடி காடுகளுக்கு உரித்தான நிலப்பகுதியை அத்துமீறிக் கையகப்படுத்திக் கொள்வதுண்டு.

இலங்கையின் ஒட்டுமொத்த நிலப்பகுதியில் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் 70 வீதமாகப் பரவிக்கிடந்த காடுகள், தற்போது குறைவடைந்து 29.7 வீதமாக மாத்திரம் காணப்படுகின்றன என்று வன திணைக்களம் மதிப்பீடொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

காடுகளை அழிப்பதும் திட்டமிடப்படாத அபிவிருத்தியும் வெள்ள அனர்த்தத்தின் கனதியை அதிகரிப்பதில் முக்கியமான தாக்கத்தை உண்டு பண்ணுகின்றபோதும், அதிகரிக்கும் சனத்தொகை, விவசாயப் பாவனைக்காக மேலும் அதிகமான நிலப்பகுதியை மாற்றியமைத்தல் மற்றும் துரிதமான நகரமயமாக்கல் போன்ற விடயங்களும் இதற்கான மேலும் காரணங்களாக அமைந்துள்ளன. - என்றுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 12.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 29 ஆம் நாள் திரிதீயைத்திதி இரவு 1.18 மணி வரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம்: பூராடம் பகல் 10.50 மணி வரை. பின்னர் உத்தராடம். மரணயோகம் முழுவதும். ராகுகாலம்: காலை 7.26 மணி முதல் 9.00 மணி வரை. சுபநேரம்: பகல் 11.53 மணி முதல் 1.24 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: வைகாசிமாத தேய்பிறை திருதியை. பிறந்த நட்சத்திர வழிபாடு: இல்லை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். வெளிநாட்டுப் பணம் வந்து சேரும். வீடு, காணி வசதிகள் கிடைக்கும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**ரிஷபம்:** சஞ்சலமான நாள். உறவினர்கள் பகைவர்களாக மாறுவார்கள். செய்யும் தொழிலில் பல இடைஞ்சல்கள், நெருக்கடிகள் உண்டாகும்.

**மிதுனம்:** விருத்தியான நாள். புத்திரர்களின் கல்வி, வேலைவாய்ப்புகள் சம்பந்தமான காரியங்கள் கைகூடும். வியாபாரிகளுக்குத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு நற்பலனைத் தரும்.

**கடகம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் சரளமாக இருக்கும். விட்டுப் பிரிந்த உறவுகள் நட்புடன் பழகுவார்கள்.

**சிம்மம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொட்ட காரியம் யாவும் அனுகூலமாகும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**கன்னி:** சலனம் மிகுந்த நாள். மனக்குழப்பம் அதிகரிக்கும். எவ்விஷயத்திலும் சரிவர முடிவு எடுக்க முடியாமல் இருக்கும்.

**துலாம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். தொழிலில் உழைப்பும், அலைச்சல்களும் அதிகமாகும்.

**விருச்சிகம்:** மேன்மையான நாள். எதிர்பார்த்துக் காத்திருந்த காரியம் கைகூடும். பெண்களுக்கு திருமண வாய்ப்புகள் கைகூடும்.

**தனுசு:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு அதிகரிக்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். விரும்பிய வரன் அமையும்.

**மகரம்:** துயரமான நாள். குடும்பத்தில் சிறுசிறு பூசல்கள் உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் பாராமுகமாக நடந்துகொள்வார்கள்.

**கும்பம்:** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். சிலருக்கு புதிய தொழில் தொடங்க வாய்ப்புகள் அமையும். பெண்களுக்கு திருமண யோகம் உண்டாகும்.

**மீனம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணியாளர்களுக்கு வேலைப்பளு, உறக்கமின்மை போன்ற பிரச்சினைகள் உண்டாகும்.

**சந்திராட்டம நாள்: புனர்பூசம் 4 ஆம் கால் பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.**

# வவுனியாவில் கடும் வறட்சி நிலை; குடிதண்ணீர் பெறுவதில் சிரமம்!



விவசாய நடவடிக்கைகளும் பாதிப்பு

வவுனியா, ஜூன் 12

வவுனியாவில் தொடரும் கடும் வறட்சியான காலநிலை காரணமாக மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதிலும் விவசாய நடவடிக்கைகளிலும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த கால போக நெற்செய்கைக் காலப்பகுதியில் இருந்து கடுமையான வறட்சியான காலநிலை நீடித்து வருகிறது. இதனால் விவசாயிகளின் தோட்டச் செய்கை நடவடிக்கைகள், சிறுபோக நெற்செய்கை என்பன பாதிப்படைந்துள்ளன.

அவை கடுமையான வெப்பம் காரணமாக கருகிக் காட்சியளிக்கின்றன. இதனால் மக்கள் நாளாந்த குடும்பச் செலவுகளை எதிர்கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர்.

விவசாயத்துடன் இணைந்ததாகக் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் மக்கள் தமது கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இன்றி அவதிப்படுகின்றனர். வறட்சியால் மைதானம் போன்று காட்சியளிக்கும் குளப்பகுதிகளைக் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைகளாகப் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது.

வவுனியாவின் பல பகுதிகளில் மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதிலும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். அந்தவகையில், வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரத்து 507 குடும்பங்களைச் சேர்ந்த 85 ஆயிரத்து 771 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ-100)

# கிளிநொச்சி பொதுச்சந்தையில் வாகனத் தரிப்பிடம் நிறுவுங்கள்!

## வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை

கிளிநொச்சியில் பொது சந்தைக்கு வருகைதரும் பொது மக்கள் அங்கு சைக்கிள்கள் மற்றும் மோட்டார்சைக்கிள்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு வாகன பாதுகாப்பு நிலையம் காணப்படாமை தொடர்பில் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்-

'கிளிநொச்சி பொது சந்தை வளாகத்தைச் சுற்றி நான்கு பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு பாதைகளிலும் நான்கு பேர் நின்று சந்தை வளாகத்தில் இருந்து வெளியே செல்லும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களிடம் பாதுகாப்பு பணம் என்று கூறி பணம் அறவிடுகின்றனர்.

இந்நிலையில், சந்தை வளாகத்தினுள் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்படாமையால் யாருடைய சைக்கிள்கள் எனத்தெரியாமல் அவற்றைக் கொண்டு வரும் நபர்களிடம் பணத்தை அறவிட்டு வெளியேறுகின்றனர்.

இதேவேளை, மேற்படி சந்தை வளாகத்தினுள் 16 கண்காணிப்பு கமெராக்கள் கரைச்சிப் பிரதேச சபையினரால் அண்மையில் பொருத்தப்பட்ட நிலையில், 7 கண்காணிப்புக் கமெராக்கள் மாத்திரமே இயங்குகின்றன.

இதேவேளை, 100 இற்கும் மேற்பட்ட சைக்கிள்கள் சந்தை வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளநிலையில், அவற்றில் சில காணாமற் போயுள்ளன.

இதுதொடர்பில் பல முறை எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்திய போதிலும், எந்த விதமான நடவடிக்கைகளும் பெற்றுத்தரவில்லை' எனத் தெரிவித்துள்ளனர். எனவே, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்றை அமைக்குமாறு வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)



# குழந்தைத் தொழிலாளர்

## உலகம் முழுவதும் 25 கோடி பேர்!

பல லட்சக்கணக்கான குழந்தைகள் பள்ளிகளிலும், விளையாட்டுத் திடல்களிலும்இருக்கவேண்டிய நேரத்தில் தொழிற்சாலைகளிலும், பண்ணைகளிலும், செங்கற்சூளைகளிலும், சுரங்கங்களிலும் வேலை செய்கின்றனர். இதைக் கருத்தில் கொண்டே சர்வதேச குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்கும் நோக்கத்துடன் ஜூன் 12 ஆம் திகதி உலக குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

உலகில் 25 கோடி குழந்தை தொழிலாளர் உள்ளனர், இதில் 10 கோடி பேர், பாதுகாப்பற்ற கஷ்டமான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என 'யுனிசெப்' நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. ஆனால் குழந்தைத் தொழிலாளர்களின் உண்மையான எண்ணிக்கை கணக்கில் உள்ளதைவிட அதிகமாகும்.

உலகளவில் 5 முதல் 14 வயதுக் குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது குற்றமாகவே உள்ளது. இருந்தாலும் சில குழந்தைகள் பள்ளி முடிந்தவுடனும் பகுதி நேரமாகவும் வேலைக்குச் செல்கின்றனர். சிலர் தங்கள் பெற்றோர்களுக்கு உதவியாக இருக்கின்றனர். இவர்கள் குழந்தைத் தொழிலாளர்களாகக் கருதப்பட மாட்டார்கள். ஆனால் கல்வி, சுகாதாரம், அடிப்படை உரிமை, உடல், மனம், சமூகம் ஆகியவை பாதிக்கும் வகையில் குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்துவது குற்றம் என சர்வதேச தொழிலாளர் அமைப்பு வரையறுத்துள்ளது.

உலக அளவில் ஆசியாவில்தான் அதிக எண்ணிக்கையில் குழந்தை தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதில் இந்தியாவில்தான் அதிகம். அதிலும் தமிழ்நாட்டில் செங்கற் சூளை, அரிசி ஆலை, சாயப்பட்டறை

**இன்று உலக குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் தினம் அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது**

கள், பட்டு நெசவு, பின்னலாடை, பட்டாசு, தீப்பெட்டி தொழிற்சாலையில் அதிக எண்ணிக்கையில் குழந்தைத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களைப் பெரிய பிள்ளைகளாக காட்ட வயதுக்கு வராத பெண் பிள்ளைகளை தாவணி போட்டு வரச் செல்லும் கொடுமை பல இடங்களில் நடக்கிறது.

சிறுவர், சிறுமியரை போரிலும் பல இயக்கங்கள் பயன்படுத்துகின்றன. அவர்களால் பிறருடைய கவனத்தைக் கவராமல் தப்பிக்க முடியும் என்பதும், அவர்களை எளிதில் கட்டளைகளால் கட்டுப்படுத்தலாம் என்பதும், அவர்களுக்கு மூளைச் சலவை செய்வது எளிது என்பதும் முக்கிய காரணங்களாகும்.

எண்பதுகளில் ஈராக், ஈரான் போரின் போது சிறுவர்கள் பெருமளவில் போரில் ஈடுபடுத்தப்பட்டனர் என வரலாறு சொல்கிறது. கண்ணி வெடி கள் புதைக்கப்பட்டிருக்கும் நிலங்கள் வழியாகச் சிறுவர்களை அனுப்பி சோதிப்பதும், அவர்களை போரில் வலுக்கட்டாயமாக நுழைப்பதும் என அரசுகள் சிறுவர்களை கொடுமைப்படுத்தின. சுமார் மூன்று லட்சம் குழந்தைப் போர் வீரர்கள் இருந்தனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களில் பலர் இறந்து, பலர் காயமுற்றும் தங்கள் வாழ்வின் மகத்துவமான பகுதியை இழந்துவிட்டனர் என்பது வேதனையான செய்தி. பல இயக்கங்கள் சிறுவர், சிறுமியரைப் போதைக்கு அடிமையாக்கி போரில் ஈடுபடச் செய்வதுண்டு. உள்ளூரிலேயே தேர்தல் காலங்களில் சிறுவர்கள் பல்வேறு விதமான அரசியல் வேலைகளில் ஈடுபடுத்தப் படுகிறார்கள், அதை அரசும் கண்டு கொள்வதில்லை.

சர்க்கஸ் போன்ற இடங்களில் சிறுவர், சிறுமியர் சாகசங்கள் செய்தும், கழைக்கூத்தாடிகளாகியும் வேலை செய்கின்றனர்.

இவை தவிர குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் குற்றங்கள் சர்வதேச அளவில் கவலைக்குரிய ஒன்றாகவே மாறிவருகிறது. பாலியல் தொழிலில் குழந்தைகள் ஈடுபடுத்தப்படுவது தான் சமுதாயத்தின் மிகப்பெரும் அவமானம் எனக் கருத வேண்டும். குறைந்த பட்ச பணத்துக்காக மழலைகளின் எதிர்காலத்தை பாலியல் பயங் கரத்துக்குப் பலியிடுவதில் பல பெற்றோரே உடந்தையாய் இருக்கிறார்கள் என்பது உறைய வைக்கும் உண்மை.

பண்டைக்காலங்களில் விவசாயத்தை நம்பியே வாழ்ந்த குடும்பத்தினர் தங்கள் குழந்தைகள் கல்வியறிவு பெறுவதைவிட அனுபவ அறிவு பெறுதல் சிறந்ததென்று விவசாயத்தில் ஈடுபடுத்தினர். அதை அவர்கள் குழந்தைத் தொழிலாளராகப் பார்க்கவில்லை. குடும்பத்திற்குத் தேவையான பணியாகவே கருதினார்கள். பின் காலம் செல்லச் செல்ல மாறிவரும் சூழலுக்கும், அமைப்புக்கும் ஏற்ப குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளும் மாறின.

நேபாளத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் பெருமளவில் உள்ளனர். சுமார்

**சில நாடுகளில் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தும் நிலை**



அறுபது சதவீதத்துக்கும் மேலான குழந்தைகள் இங்கே விவசாயம் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அகதிகளாக சொந்த நாட்டை விட்டு வெளியேறி பிற இடங்களில் குடிபெயரும் மக்கள் பெரும்பாலும் குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் பரிதாப நிலையையே கொண்டுள்ளனர். மெக்ஸிக்கோ போன்ற நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்குள் நுழையும் மக்களும் இந்த நிலைக்கே தள்ளப்படுகின்றனர்.

குழந்தைத் தொழிலாளர் நிலை இன்று வளரும் நாடுகளில் மட்டுமே பெருமளவில் இருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். வறுமையே இதற்கு முதன்மைக் காரணமாகச் சொல்லப்படுவதனால் அதற்குரிய மாற்று ஏற்பாடுகளை குடும்பங்களில் செய்யாமல் குழந்தைத் தொழிலை அறவே ஒழிப்பது சாத்தியமில்லை. சட்டங்களினால் குழந்தைகளை வேலைக்கு வருவதை நிறுத்தும் அதே நேரத்தில் அந்த குழந்தைகளுக்குக் கல்வியை அளிப்பதற்குரிய வசதிகளையும் அரசு செய்தல் அவசியம்.

நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் குழந்தைத் தொழிலாளர் நிறைய பேர் இருந்த பிரித்தானியா போன்ற பல மேலை நாடுகள் இன்று முழுவதும் அதிலிருந்து விடுபட்டுவிட்டன. அதற்கு சட்டங்களும் அரசின் தொலை நோக்குப் பார்வையுமே காரணம் எனலாம்.

அங்கு குழந்தைப் பராமரிப்புக்கு ஏராளமான நலத் திட்டங்கள் உள்ளன. தாய்மை நிலையிலுள்ளவர்களுக்கு, குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு, தத்து எடுத்துக் கொண்டவர்களுக்கு என பல சலுகைகள் உள்ளன. பெற்றோருக்கு வரிகுறைப்பு, குழந்தை பராமரிப்பு நிதி என பல நடைமுறையில் உள்ளன.

ஒருங்கிணைந்த நாடுகளின் கூட்டமைவு 1989 ஆம் ஆண்டு 'குழந்தைகளின் உரிமை' பற்றிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்தன. அதன் படி சிறுவர்களுக்கு 52 உரிமைகள் இருக்கின்றன என்று அதில் வரையறுக்கப்பட்டுள்ளது. 189 நாடுகள் இதுவரை அதில் கையொப்பமிட்டுள்ளன.

குழந்தைகளைத் தொழிலுக்கு ஈடுபடுத்தப்படாமலும், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குகளில் ஈடுபடவும், வீடுகளில் தங்கி வளரும் உரிமையையும், ஆரோக்கியமான வாழ்வுக்கு உரிமையுடையவர்களாகவும், கல்விக்கு உரிமையுடையவர்களாகவும், கருத்துச்சுதந்திரம் உடையவர்களாகவும், வன்முறைகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டியவர்களாகவும் குழந்தைகளை அந்த ஒப்பந்தம் சித்திரித்தது.

எளிய வேலையோ, கடினமான வேலையோ குழந்தைகள் தங்களுடைய வாழ்வின் அடிப்படையாகிய கல்வி போன்ற உரிமைகளை விட்டு விட்டு வேலை செய்வதே மனித உரிமைக்கு எதிரானதாகும் என்பதை அவை பல்வேறு ஒப்பந்தங்கள் மூலமாக வலியுறுத்தின.

மேலை நாடுகளில் 1851 ல் உருவாக்கப்பட்ட தொழிற்சாலை விதிகள் எட்டு வயதுக்குக் குறைந்தவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தது. தங்கச் சுரங்கம் போன்ற இடங்களில் வயது பத்து என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன்பின் காலம் செல்லச் செல்ல அந்த வயது வரம்புகள் ஒத்துக் கொள்ள முடியாதவை என்று விலக்கிக் கொள்ளப்பட்டன. குழந்தைகள் வேலைக்குச் செல்வதே தவறு என்பது உணரப்பட்டது.

வீடுகளில் இருக்கும் புகைபோக்கிகளைச் சுத்தம் செய்வதற்காக பயிற்சி பெற்ற சிறுவர்கள் புகை போக்கிகளில் ஏறி சுத்தம் செய்வது மேலை நாடுகளில் முன்பு இருந்த வழக்கம். பல ஆயிரக் கணக்கான சிறுவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்தார்கள். புற்றுநோய் போன்ற பல நோய்களுக்கு இந்த சிறுவர்கள் ஆளாவதாகச் சொல்லி 1875 ஆம் ஆண்டு அது தடை செய்யப்பட்டது.

சமூகத்தின் வேர்களில் கரையானாக அரித்துக் கொண்டிருக்கும் இந்த சிறுவர் தொழில் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து மனித நேயமும், தொலை நோக்குப் பார்வையும், சமூக அக்கறையும் கொண்டவருக்கும் இருக்கப் போவதில்லை. இதை ஒழிக்க முக்கிய தேவை என்ன? கல்வி.

கல்வியறிவு பெறாமல் சிறு சிறு வேலைகளில் ஈடுபடும் சிறார்கள் தாங்கள் சூழ்ந்திருக்கும் மக்களின் பழக்கங்களைக் கற்றுக் கொண்டு விரைவிலேயே சமூக விரோதச் செயல்களைச் செய்யவும், தன்னை வாழவைக்காத சமூகத்தின் மீது வன்முறைக் கோபம் கொள்ளவும் பழகிவிடுகிறார்கள்.

குழந்தைகளுக்கு இலவசக் கல்வியை அளிப்பதும், அந்த கல்வியைக் குழந்தை பெறுவதற்குரிய வாகன வசதிகளைச் செய்வதும் என உலக நாடுகள் பலவும் இப்போது குழந்தைத் தொழிலை ஒழிக்க பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகின்றன. தென்கொரியா, தைவான் போன்ற நாடுகளில் பெரும்பாலானோர் கல்வியறிவு பெறும் நிலை இன்று உருவாகியுள்ளது.

வளர்ந்த நாடுகளில் குழந்தைகள் வேலைக்குச் செல்லல் என்பது ஒன்று முதல் இரண்டு சதவீதம் மட்டுமே. அது வளரும் நாடுகளைப் பொறுத்த வரையில் இருபதை எட்டுகிறது. காரணம் வளர்ந்த நாடுகளில் காணப்படும் சட்டங்களின் செயலாக்கமும், விழிப்புணர்வும், சமூக அக்கறையுமே.

குழந்தைத் தொழிலாளர் நிலைக்கு வறுமை மட்டுமே ஒரே காரணம் என்று சொல்ல முடியாது. ஆனால் பெரும்பாலான கேள்விகளுக்கான விடைகள் பொருளாதாரம் சார்ந்ததாகவே இருக்கின்றன. வறுமையுடன் சேர்த்து, பெற்றோர் வேலைக்குச் செல்ல இயலாத நிலையில் வயோதிகமாகவோ, ஊனமுற்ற நிலையிலோ இருத்தல், தாய் விதவையாக இருத்தல், பெற்றோர் குடி போன்ற போதைகளுக்கு அடிமையாய் இருத்தல் போன்றவையும் குழந்தைத் தொழிலாளர் நிலையை வளர்க்கின்றன.

குழந்தைத் தொழிலாளர் நிலை என்பது ஏதோ சில இடங்களில் நிலவி வரும் பிரச்சினையல்ல. இது ஒட்டுமொத்த சமூகத்தின் மீதான களங்கமும், உலக அரங்கில் சுமத்தப்படும் அவமானமும் என்பதை அனைவரும் உணரவேண்டும். ★

பொன்.வேணு கிருஷ்ணா




டோனி பிளேயரின் தொழிற் கட்சி அரசின் கீழ் MI6 இன் பாத்திரத்தை ஒபர்ன் சுட்டிக்காட்டினார், அப்போது தொழிற்கட்சியின் முன்னாள் உளவுத் துறைத் தலைவர்கள், சர் ரிச்சார்ட் டீர்லவ் மற்றும் சர் ஜோன் ஸ்கார் லெட், தொழிற் கட்சி பிரதம் மந்திரியின் போர் வெறி கொண்ட குழுவிற்கான ஒரு பிரசார கருவியாக மாற MI6 ஐ அனுமதித் திருந்தனர்.''

சதாம் ஹூசைனிடம் இருந்திராத பாரிய பேரழிவுகரமான ஆயுதங்களைக் குறித்த இழிவுகரமான ஆவணங்களை ஸ்கார்லெட் தான் வரைவு செய்தார், இவை பிரிட்டனை போருக்குள் கொண்டு செல்ல பிளேயரால் பயன் படுத்தப்பட்டன.

''ஜிஹாதிஸ்ட் அமைப்புகளில் இணைவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட'' நூற்றுக் கணக்கான'' பிரிட்டிஷ் குடிமக்களை சுட்டிக்காட்டி, ஒபர்ன் எழுதுகையில், இந்தத் தோல்வியில் இருந்து MI6 படிப்பினைகளைப் பெறத் தவறிவிட் டது.'' - என்றார்.

LIFG மற்றும் ஏனைய அல் கொய்தா தொடர்புபட்ட குழுக்களுடன் பிரிட்ட னின் கீழ்த் தரமான கையாளுகைகள் 1990 கள் வரை நீள்கிறது. சோவியத் ஒன்றியத்தை நிலைகுலைப்பதன் பாகமாக ஆப்கானிஸ்தானில் அமெரிக் காவால் கட்டமைக்கப்பட்ட முஹாஜி தீன்களில் இருந்து தான் LIFG வளர்ந் தது. அப்போதிருந்து LIFG இன் தலை விதி, பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை மாற்றங்களை



நேரடியாக பின்தொடர்ந்துள்ளது.

மூத்த பிரெஞ் உளவுத்துறை அதிகாரிகள் மற்றும் முன்னாள் MI5 அதிகாரி டேவிட் ஷ்யேலெர் ஆகியோரது கசிவுகளின்படி, கடாபியைப் படுகொலை செய்யும் முயற்சிக்காக 1996 இல் பிரிட்டிஷ் உளவுத்துறை முகமைகள் LIFG தலைவர்களுக்கு பெரும் தொகை களை வழங்கின

மூத்த பிரெஞ் உளவுத்து றை அதிகாரிகள் மற்றும் முன்னாள் MI5 அதிகாரி டேவிட் ஷ்யேலெர் ஆகி யோரது கசிவுகளின்படி, கடாபியைப் படுகொலை செய்யும் முயற்சிக்காக 1996 இல் பிரிட்டிஷ் உளவுத்துறை முகமைகள் LIFG தலைவர்களுக்கு பெரும் தொகைகளை வழங்கின. 2004 இல், லிபிய ஆட்சியுடனான பிளேயர் அரசாங்கத்தின் சமரசத்திற்குப் பின்னர், LIFG தலைவர் அப்தெல்-ஹகீம் பெல்ஹாஜ் மற்றும் அவர் நிர் வாகி சமி அல்-சாடியைப் பிடிக்க MI6 உதவியது. பிரிட்டிஷ் வரலாற்றாளரும் எழுத்தாளருமான மார்க் குர்டிஷ் கருத் துக்களின்படி, பெல்ஹாஜ் சிஐஏ வசம் ஒப்படைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, பின்னர் தனிச் சிறைச் சாலையில் ஆறாண்டுகள் செலவிட திரிப்போலிக்கு அனுப்பப்பட்டார்,

அங்கே MI6 முகவர்கள் அவரை விசா ரணை செய்ததாக செய்திகள் தெரி விக்கின்றன.

2011 இல், அரேபிய எழுச்சிக்கு விடையிறுப்பாக, அமெரிக்காவும் பிரிட்டனும் மத்திய கிழக்கில் ஆட்சி மாற்ற நடவடிக்கைகளுக்காக நீண்ட காலமாக நிலுவையில் இருந்த திட் டங்களைச் செயலுக்குக் கொண்டு வந்தன. LIFG தலைவர்களுக்கு எதி ரான பயங்கரவாத-தடுப்பு கட்டுப் பாட்டு ஆணைகள் நீக்கப்பட்டன, ஏனென்றால், குர்டிஷ் கருத்துப்படி, பிரிட்டிஷ் அரசாங்கம் ''அதன் நலன்கள் மீண்டுமொருமுறை -பிரதானமாக எண்ணெய் சம்பந்தப்பட்ட நலன்கள்-லிபியாவில் இருந்த இஸ்லாமிய சக்திகளுடனான நலன்களுடன் பொருந்தி இருந்ததாகக் கண்டது.''

சிரியா, லிபியா, ஈராக், ஆப்கானிஸ் தான் மற்றும் எண்ணற்ற ஏனைய நாடுகள் மீது படையெடுத்து ஆக்கிரமித் ததற்கு குறைவில்லாத விதத்தில், மான்செஸ்டரில் கொல்லப்பட்ட 22 பேரும் மற்றும் காயமடைந்த பலரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சதிக்குப் பலியானவர்கள் என்பதோடு, இவற்றை ''துணைச் சேதமாக'' கருத வேண்டும்.

### சல்மான் அபேடி மீதான அதன் விசாரணையை MI5 ஏன் கைவிட்டது, யார் அதற்கு ஒப்புதல் வழங்கியது?


இந்த அதிர்ச்சியூட்டும் வெளியீடு கள் பதிலளிக்கப்பட வேண்டிய பல கேள்விகளை எழுப்புகின்றன:

★ சல்மான் அபேடி மீதான அதன் விசாரணையை MI5 ஏன் கைவிட்டது, யார் அதற்கு ஒப்புதல் வழங்கியது?

★ நன்கறியப்பட்ட பயங்கரவாத மையங்களுக்கும் அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மத்திய கிழக்கெங் கிலும் அவரால் எவ்வாறு சுதந்திரமாக பயணிக்க முடிந்தது?

★ பிரிட்டனில் ஓர் அரசியல் இலக்கை தாக்குவதற்கான அச்சுறுத்தல் கள் குறித்து MI5 உளவுச்சேவை தெரேசா மே அரசாங்கத்திற்குத் தெரி வித்திருந்ததா?


★பயணம் செய்வதற்கான நிதி மற்றும் பல வீடுகளை வாடகைக்கு எடுப்பதற்கான நிதி உள்ளடங்கலாக, தாக்குதல்களுக்கு முன்னதாக அபேடி அவர் நடவடிக்கைகளுக்குத் தேவை யான நிதியைப் பெற, பல்கலைக் கழகங்களுக்கு செல்லாமலேயே, மாணவர்கடனாக அவரால் எவ்வாறு ஆயிரக் கணக்கான பவுண்களை பெற முடிந்தது?



கடந்த வாரம் தொழிற் கட்சி தலை வர் ஜெர்மி கோர்பின், காலனித்துவ -பாணியிலான போர்களில் பிரிட்டன் சம்பந்தப்பட்டிருப்பதற்கும் மற்றும் பயங்கரவாத அபாயம் உயர்ந்திருப் பதற்கும் இடையிலான வெளிப்படை யான தொடர்பைச் சுட்டிக்காட்டி, ஊட கங்களின் வெறுப்பைச் சம்பாதித்தார். கார்டியன் அத்தாக்குதல்களுக்கு வழி காட்டி இருந்தது, ஜொநாதன் ப்ரீட் லாந்து வலியுறுத்துகையில், ''பயங்கர வாதத் தாக்குதல்கள் வெளியுறவு கொள்கை சம்பந்தப்பட்டதென யோசிப் பது பைத்தியக்காரத்தனமானது.'' என் றார், மற்றும் பௌல் மாசன் அறிவிக் கையில், ''இஸ்லாமிய பயங்கரவாதத் திற்கு நேரடியாக மேற்கத்திய சாகச போர்முறையைக் குறைகூறும் இந்த 'திரும்பி தாக்கும் தத்துவம்' (blowback theory), இவ்விடயத்தில் கூறுவதற்கு எளிமையாக இருந்தாலும் பொருத்த மின்றி உள்ளது.'' என்றார்.

ஆனால் ஆக்கிரமிப்பு போர்களைத் தொடங்கியதிலும் மற்றும் கூடுதல் ஆதாரவளங்களாக படை மற்றும் பாது காப்புச் சேவைகளை வழங்க வாக்குறுதி யளித்ததிலும், அடுத்தடுத்து ஆட்சி க்கு வந்த தொழிற் கட்சி மற்றும் டோரி அரசாங்கங்களே அரசியல் பொறுப்பா கின்றன என்பதைக் குறித்து கோர்பின் வாய்திறக்கவில்லை. அபேடியின் தாக்குதல் குறித்து MI5 க்கு முன்கூட் டியே எச்சரிக்கப்பட்டிருந்தது மீதான வெளியீடுகள் குறித்து அவர் இதுவரை யில் ஒன்றுமே கூறவில்லை.

### ஜேர்மனி - அமெரிக்கா இடையிலான விரிசல்




*வார இறுதியில் (29 May 2017 ) நடந்த G7 உச்சிமாநாடு அமெரிக்கா வுக்கும் முக்கிய ஐரோப்பிய சக்திகளுக் கும் இடையிலான பகிரங்கமான விரி சலுடன் முடிவடைந்தது. ஜேர்மன் சான்சிலரான அங்கேலா மேர்கெல், போருக்குப் பிந்திய ஸ்திரநிலைக்கு அடிப்படையை வழங்கியிருந்த அட் லாண்டிக் கடந்த கூட்டணி முடிந்து விட்டதாக அறிவிக்காத குறைதான்.*

முனிச் பீர் கூடார பிரச் சாரபேரணி ஒன்றில் உரையாற்றிய மேர்க்கெல் கூறினார்: நாம் முழுமையாக மற்ற வர்களைச் சார்ந்திருந்த காலம் குறிப் பிட்ட மட்டத்திற்கு முடிந்து போய் விட்டது -கடந்த சில நாள்களில் அதை நான் அனுபவத்தில் கண்டேன். ஐரோப் பியர்களாகிய நாம் நமது தலைவிதியை நமது சொந்தக்கரங்களில் எடுத்தாக வேண்டும்.

அமெரிக்காவுடனான பகிரங்கமான மோதல்களைக் கண்ட உச்சிமாநாடு முடிவடைந்த ஒரு நாளின் பின்னர் மேர்க்கெல் பேசிக் கொண்டிருந்தார். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புருசெல்ஸில் நடந்த ஒரு கூட் டத்தில், நேட்டோவின் உறுப்பு நாடு களில் ஏதேனும் ஒன்று தாக்கப்படும் போது அதற்கு மற்றவை உதவிசெய்வதை கடமையாக்கும் நேட்டோ உடன்படிக் கையின் ஐந்தாவது ஷரத்துக்கு உறுதிப் பாட்டை மறு உறுதி செய்ய மறுத்ததை அடுத்துஇந்த விரிசல்தோன்றியிருந்தது. அதனைத் தொடர்ந்து நடந்த ஒரு நேட்டோ கூட்டத்தில், கூட்டணிக்கு ஐரோப்பியர்கள் ''செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதில்லை'' என்று ட்ரம்ப் சிறுமைப்படுத்தினார்.

G7 இல் மிகவும் வெளிப்படையான மோதல், காலநிலை தொடர்பான 2015 பாரிஸ் உடன்படிக்கை வழிமொழியப் பட்டதன் மீது மையம் கொண்டிருந்தது, இது அமெரிக்காவில் பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருப் பதால் அநீதியானது என்பதாக ட்ரம்ப் நிர்வாகம் கருதுகிறது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.


அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – அவுஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்கூறுகளை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

1



## முகவுரை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இலங்கையில் தமிழரின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி முன்னெடுத்து வரும் ஒரு விடுதலை இயக்கம் என்பது உலகம் நன்கறிந்த விடயம். ஆயினும், இந்த இயக்கத்தின் உண்மையான தன்மை பற்றியோ, கட்டமைப்புப் பற்றியோ, அதன் தலைமைத்துவத்தின் சிறப்பியல்புகள் பற்றியோ உலகத்தாருக்கு அதிகம் தெரியாது. அது போன்றே தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்கள் பற்றியும் அனைத்துலகம் அறியாது. இறுக்கமான பத்திரிகைத் தணிக்கை, யுத்தப் பிரதேசங்களுக்கு வெளியார் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடை, உலக அரசுகளினதும் சர்வதேச ஊடகங்களினதும் பாராமுகம் ஆகியன இந்த நிலைமைக்குக் காரணம் எனலாம். இந்த இருட்டடிப்பு, அரசியல் ஆய்வாளர்கள், இராணுவ நிபுணர்கள், எதிர்ப்புரட்சி விற்பன்னர்கள் எனக் கூறிக்கொள்வோருக்குத் தாம் எண்ணியமையை எழுதக் கட்டுப்பாடுகள் அற்ற பரந்த இடைவெளியைத்திறந்து விட்டது. இதனால் விடுதலைப் புலிகள் அமைப்புப் பற்றியும், தமிழர்களது போராட்டம் பற்றியும் உண்மையைத் திரிவுபடுத்தி பொய்யும் புரட்டுமாக எழுதுவதற்கு இவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. வேண்டுமென்றே இவர்களால் உருவாக்கப்பட்ட கோரமான, அசிங்கமான படிமங்கள், பதிவுகள், சித்திரிப்புகள் காரணமாகத் தமிழரின் இன நெருக்கடிக்குப் பின்னாலுள்ள உண்மைகள் மூடி மறைக்கப்பட்டன. தமிழரின் விடுதலைப் போராட்டத்தை மூடி மறைத்து நிற்கும் மர்மத் திரையை நீக்கி, ஒரு மக்கள் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட கொடூரமான அடக்கு முறை பற்றியும் அதற்கு எதிராக வெடித்த எதிர்ப்பு முறை பற்றியுமான உண்மைக் கதையை- உள்ளார்ந்த கதையை- எடுத்துக் கூறுவதே இந்த நூலின் நோக்கமாகும்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நான் எனது வாழ்க்கையை தமிழ்ப் புலிகளுடன் செலவிட்டிருக்கின்றேன். தமிழீழ சுதந்திரப் போராட்டத்தில் நான் பங்காற்றிய எனது வரலாற்றுப் பயணமும், அந்தக் கால கட்டத்தில் எனக்கு ஏற்பட்ட அபூர்வமான அனுபவங்களும் இந்த நூலில் விவரிக்கப்படுகின்றன. தமிழரின் ஆயுதப் போராட்டத்தின் படிநிலை வரலாற்று வளர்ச்சியில், காலவரிசைப்படி கட்டவிழும் நிகழ்வுகள், சம்பவங்கள், வாழ்வனுபவங்களைச் சரித்திர ரீதியாகவும், சுய சரித விவரணையாகவும் இங்கு எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

அவுஸ்திரேலியாவிலுள்ள ஒரு சிறிய, அறியப்படாத கிராமத்தைச் சேர்ந்த ஓர் இளம் பெண், புதிய அனுபவம் தேடி, தனது சொந்த நாட்டை விட்டு ஐரோப்பாவிற்குப் பயணித்தபோது தனது வாழ்க்கையில் ஒரு புரட்சிகரமான மாற்றத்துக்கு எவ்வாறு ஆளாகினாள் என்ற கதை பற்றி இந்த நூலில் ஆரம்பப் பகுதிகளில் விளக்கப்படுகின்றது. 30 ஆண்டுகளுக்கு முன்னர், ஐரோப்பிய பயணத்தை மேற்கொண்டு அவுஸ்திரேலியாவிலிருந்து நான் விமானம் ஏறியபொழுது எனது வாழ்க்கையில் ஓர் அடிப்படையான மாற்றம் நிகழப் போகிறது என்பதை அப்பொழுது நான் சிறிதளவும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், எவரும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு அது நடந்தேறியது உண்மைதான். வெளியுலகப் பயணங்கள் அன்றி, இங்கிலாந்தில் பெற்ற உயர் கல்வி போன்றவற்றுக்கு அப்பால் அது நிகழ்ந்திருக்கின்றது. எனது உலகப் பார்வை அடிப்படையாகவே மாற்றம் கண்டது. எனது வாழ்நிலை மாற்றத்தை தீர்மானிக்கும் சக்தியாக பெரும் பங்கு ஆற்றியவர் எனது கணவன் அன்ரன் பாலசிங்கம் அவர்களே. 1978 ஆம் ஆண்டு எமது திருமணம் நிகழ்ந்தது. இந்தத் திருமணம் கருத்தியல் ரீதியான, கண்ணோட்ட ரீதியான, விழுமிய ரீதியான ஒரு பிணைப்பு என்றே சொல்வேன். அன்று தொட்டு, எவரும் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் நாம் எல்லா சவால்களுக்கும், சூழ் நிலைகளுக்கும் முகம் கொடுத்து, ஒரு புரட்சிகரமான பாதையில் ஒன்றாகக் கைகோர்த்து நடந்திருக்கின்றோம். இவ்வாறு, தமிழரின் சுதந்திரப் போராட்டத்தில் எமது ஈடுபாடு ஓர் அபூர்வமான வாழ்க்கை வரலாறாகக் கட்டவிழ்கிறது.

1978 ஆம் ஆண்டு, லண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நாம் அறிமுகமானமையைத் தொடர்ந்து, இந்தியா சென்று புலிகள் அமைப்பின் தலைவர்களையும் போராளிகளையும் சந்திப்பது என ஒரு தீர்க்கமான முடிவை எடுத்தோம். இந்தியாவில், தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில், புலிகள் இயக்கத்தின் நிறுவன கர்த்தாவான வேலுப் பிள்ளை பிரபாகரன் என்ற இளைஞரைச் சந்தித்தோம். இவர், கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலான காலத்தில் ஒரு காவியநாயகனாக போற்றப்படுகின்றமை மட்டுமன்றி, தனது ஒடுக்கப்பட்ட மக்களின் தேசியத் தலைவன் என்ற பாத்திரத்தைப் பெற்றிருக்கிறார். பிரபாகரனுக்கும், அவரது தோழர்களுக்கும் நாம் அறிமுகமான விவரங்களை இரண்டாவது அத்தியாயத்தில் விவரிக்கின்றேன். அத்தோடு, அங்கு விடுதலைப் புலிகளின் உள்ளார்ந்த செயற்பாட்டு சிக்கல்களையும் விளக்குகின்றேன். ஒரு தலைமறைவான கெரில்லா இயக்கத்தை, சிங்கள அரசின் படைப் பலத்துக்கு ஈடுகொடுக்கும் வல்லமை படைத்த ஒரு தேசிய விடுதலை இராணுவமாக மாற்றுவதில் புலிகள் எதிர்கொண்ட இடர்களையும், சிக்கல்களையும் அவர்களது ஆரம்ப வரலாறு தெளிவாகப் புலப்படுத்துகிறது. உள்ளீடான முரண்பாடுகளும் செயற்பாட்டு சிக்கல்களும் இயக்கத்தின் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவே செய்தன. அத்தோடு, அரச ஒடுக்குமுறைபோன்ற யதார்த்த புறநிலைகளும் இயக்கத்தின் வளர்ச்சியிலும் விரிவாக்கத்திலும் தாக்கத்தை விளைவிக்கத் தவறவில்லை. 1983 ஆம் ஆண்டில் வெடித்த இனவாதக் கலவரங்கள் தமிழ், சிங்கள தேசங்கள் மத்தியிலான உறவில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தின எனலாம். அது, தமிழ் நாடாளுமன்ற அரசியலுக்கு சாவு மணி அடித்ததுடன், ஆயுதப் போராட்டத்தைத் தோற்றுவித்து, அதனை அரசியற் போராட்ட வடிவமாக முதன்மைப்படுத்தியது. இனக் கலவரங்களை அடுத்து, சிறிலங்காவின் சக்தி வாய்ந்த அயல் நாடான இந்தியா, இனப் பிரச்சினையில் தலையிட்டமை பெரிய விளைவுகளை ஏற்படுத்தியது.

தமிழரின் இனப் பிரச்சினையில் இந்திய மத்திய அரசும் தமிழ் நாட்டு முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனும் எவ்வாறு தலையீடு செய்தனர் என்பதை மூன்றாவது அத்தியாயத்தில் நான் விவரமாக விளக்குகின்றேன். தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியா வழங்கிய இராணுவப் பயிற்சியும், எண்பதுகளின் நடுப்பகுதியில் தமிழ் நாட்டு முதல்வர் புலிகளுக்கு வழங்கிய நிதியுதவியும் விடுதலைப் புலிகள் அமைப்பினதும் ஆயுதப் போராட்டத்தினதும் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் என்றுமில்லாத உந்துதலைக் கொடுத்தன. இந்தியாவின் நலன்களுக்கும், தமிழ்ப் போராட்ட அமைப்புகளின் அபிலாஷைகளுக்கும் மத்தியில் எழுந்த முரண்பாடுகள் ஈற்றில் இரு தரப்பினரையும் ஏமாற்றத்துக்குள் தள்ளின. இனப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு அதன் புவிசார் - அரசியல், கேந்திர நலன்களையே மையமாகக் கொண்டு அமைந்தது என்பது காலப் போக்கில் தெளிவாகப் புலனாகியது. இலங்கையை தனது வல்லாதிக்க வியூகத்தினுள் கொண்டுவந்து, தமிழ்ப் போராளி அமைப்புகளுடன் பேச்சுகளை நடத்தத் தூண்டும் நோக்குடனேயே இந்தியா தமிழ்ப் போராளிகளுக்கு இராணுவ உதவிகளை வழங்கியது. இந்தியா கடைப்பிடித்த வலிந்த இராஜதந்திரத்தின் விளைவாகவே 1985 ஆம் ஆண்டில் பூட்டான் தலைநகரான திம்புவில் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் சிறிலங்கா அரச தூதுக்குழுவினருக்கும் மத்தியில் பேச்சுகள் நிகழ்ந்தன. திம்புப் பேச்சுகள் இடைநடுவில் முறிந்தமையால் சீற்றமடைந்த இந்திய அரசு பாலாவை நாடு கடத்தியது. ஆயினும், தமிழ் விடுதலை அமைப்புகளுக்கும் இந்திய அரசுக்கும் மத்தியில் பேச்சுகள் மீண்டும் தொடர்ந்த போது இந்தியாவுக்குத் திரும்பி வருமாறு பாலாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் சென்னைக்கு திரும்பி வந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர் அவரை கொலை செய்யும் நோக்கத்தோடு எமது வீடு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. ஆயினும், இந்தக் கொலை முயற்சி தோல்வியில் முடிந்தது. இந்தச் சம்பவத்துக்குக் காரணமான குற்றவாளி கைது செய்யப்பட்டார். அவரது வாக்கு மூலத்தின் படி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அமைச்சர் ஒருவரே இந்தக் கொலை முயற்சியின் சூத்திரதாரியெனத் தெரியவந்தது. இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்த தொல்லைகள், நெருக்குதல்கள் பற்றியும் இந்த அத்தியாயத்தில் நான் குறிப்பிடுகின்றேன். இந்தச் சம்பவங்கள் இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் படிப்படியாக விரிசலை ஏற்படுத்தின.


1987 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் சிங்கள ஆயுதப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் இராணுவ மோதல்கள் தீவிரமடைந்தன. இறுதியில், சிங்கள ஆயுதப் படைகள் யாழ்ப்பாணக் குடாநாடு மீது பெரிய படையெடுப்பை மேற்கொண்டன. இதனால் பொது மக்கள் மத்தியில் பெருமளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டன. இந்த நிலையில், தீவிரமடைந்த மோதல்களை நிறுத்தும் நோக்கத்துடன் இந்தியா தலையிட்டது. இதனையடுத்து இரு அரசுகளுக்கும் மத்தியிலான இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இந்த ஒப்பந்த வரைவிலிருந்து புலிகள் புறக்கணிக்கப்பட்டனர். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விதிகளுக்கு அமைய, அமைதிகாக்கும் படை என்ற போர்வையில், இந்தியத் துருப்புகள் வடக்கு, கிழக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டன. விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள ஆயுதப் படைகளுக்கும் மத்தியில் போர் நிறுத்தத்தைக் கண்காணித்தல், புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைதல் போன்ற பணிகள் இந்திய அமைதிப் படைக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வுகளின் பின்னணியை நான்காவது அத்தியாயத்தில் நான் விவரித்துக் கூறுகிறேன். விடுதலைப் புலி வீரர்களுக்கும் இந்திய இராணுவத்துக்கும் மத்தியில் ஆயுத மோதல்கள் வெடித்து, இந்திய - புலிகள் யுத்தமாக (1987 - 1990) பரிணமித்த வரலாற்று நிகழ்வுக்குக் காரணமாக அமைந்த சோகமான - அவலமான - சம்பவங்களையும் நான் இந்த அத்தியாயத்தில் விவரிக்கின்றேன்.

தொடரும்...

காலைக்கதிர்







# வற்றாப்பளை பொங்கல் விழா!

கண்ணகி அம்மனுக்கு விளக்கு ஏற்றுவதற்கு கடல் நீரை எடுத்து வருவதற்கான சடங்குகள் ஆரம்பமாகிவிடும். வற்றாப்பளை கண்ணகியை வழி வழியாக வைத்து வழி பட்டு தொண்டு செய்பவர்களே முழு நாளும் உபவாசமிருந்து விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீரை எடுக்கும் புனித கருமத்தை செய்வர். விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீரை "தீர்த்தம்" என்றே பக்தர்கள் அழைக்கின்றனர்.



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் இலங்கையின் வடபகுதியான வன்னிப் பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய கிராமங்களை அயற்கிராமங்களாகக் கொண்டுள்ள இந்தக் கிராமம் நந்திக்கடலும், வயல் வெளிகளும், பாலைமரச் சோலையும் சூழ்ந்த பசுமையான சூழலில் அமைந்துள்ளது. இந்த ஆலய வருடாந்தத் திருவிழா இன்று இடம்பெறுகிறது.

### ஆலய வரலாறு

வன்னி மன்னர்களால் பரிபாலிக்கப்பட்ட இவ்வாலயத்தை போர்த்துக்கேயர் காலத்தில், போர்த்துக்கேய தளபதியாகிய நெவில் என்பவன் அழிக்க முற்பட்ட போது ஆலயத்தில் நின்ற பன்னிச்சை மரம் தனது காய்களை வீசி ஆலயத்தை அழிக்க விடாது தடுத்தது. இந்த அற் புத வரலாற்றை ஆலயத்தில் இன்றும் படிக்கப்படும் பன்னிச்சை ஆடிய பாடற்சிந்து மூலம் அறிய முடிகிறது.


### கடல் தண்ணீரில் எரியும் தீபம்

வற்றாப்பளை கண்ணகி என்றதும் நினைவுக்கு வருவது கடல் தண்ணீரில் விளக்கு எரியும் அதிசயம். இந்த அதிசயத்துக்கு சொந்தக்காரி அண்டமெல்லாம் ஆள்கின்ற ஆதி பராசக்தியின் சொரூபமாய் வீற்றிருக்கும் அன்னையவளே. நந்திக்கடலோரத்தில் வீற்றிருக்கும் அன்னையவள் வாசலில் கடல் தண்ணீரில் விளக்கெரியும் அதிசயம், காண்போர் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும்.

இது எவ்வாறு நடக்கும் என்ற கேள்விக்கு அன்னையின் அருள் மழையே என்பதைத் தவிர விடையேதும் இல்லை.

வைகாசிப் பொங்கல் விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்பதாகவே பொங்கல் நாளில் கண்ணகி அம்மனுக்கு விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீரை எடுத்து வருவதற்கான சடங்குகள்





ஆரம்பமாகிவிடும். வற்றாப்பளை கண்ணகியை வழி வழியாக வைத்து வழி பட்டு தொண்டு செய்பவர்களே முழு நாளும் உபவாசமிருந்து விளக்கு ஏற்று வதற்கான கடல் நீரை எடுக்கும் புனித கருமத்தை செய்வர். விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீரை தீர்த்தம்'' என்றே பக்தர்கள் அழைக்கின்றனர்.

சிலப்பதிகாரத்தின், சிலம்பு கூறல் பாட்டிலே வற்றாப்பளைக் கண்ணகிக்கும், முள்ளியவளை என்னும் ஊரில் உள்ள காட்டாவிநாயகர் ஆலயத்திற்குமுள்ள தொடர்பு கூறப்பட்டுள்ளது.

வைகாசித் திங்களில் வருவேன் ஒரு கிழமை காட்டா விநாயகர் கோவிலுக்கே என்ற அந்த பாடல் வரிக்கு அமைவாக மரபு முறைப்படி தீர்த்தமெடுக்கும் புனிதப் பணி இடம்பெறுகிறது.

ஆரம்ப காலங்களில் நந்திக் கடலிலேயே விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீர் எடுக்கப்பட்டது. பிற்காலத்தில் நந்திக்கடலில் தண்ணீர் குறைந்தமையால் முல்லைத்தீவு மாவட்டத்தின் சிலாவத்தை எனும் ஊரிலுள்ள தீர்த்தக்கரை எனுமிடத்திலுள்ள கடலிலேயே தீபம் ஏற்றுவதற்கான கடல் நீர் எடுக்கப்படுகிறது.

மதுரையை எரித்த கண்ணகி தெற்கு நோக்கி சென்றாள் என்றும் அவள் வரும் வழியில் இருந்து இளைப்பாறி சென்ற இடங்களில் பத்தாவது இடமே நந்திக்கடற்கரை ஓரம். இதனால் பத்தாப்பளை (பத்தாவது பளை) என அழைக்கப்பட்ட இந்த இடம் பிற்காலத்தில் மருவி பற்றாப்பளை என்றும் இறுதியில் வற்றாப்பளை என்றும் பெயர் பெற்றதாக ஓர் ஐதீகம் உண்டு.

மூதாட்டி ரூபத்தில், நந்திக்கடல் ஓரத்தை வந்தடைந்த கண்ணகி அங்கு மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்களிடம் தனக்கு பசிப்பதாகக் கூறி பொங்கல் ஆக்கித் தருமாறு கேட்டதோடு, பொழுது சாய்வதனால் விளக்கு ஏற்றித்தருமாறும் கேட்டுள்ளார்.

விளக்குஏற்ற நெய் ஏதும் இல்லையே என்ற அச்சிறார்களிடம் கடல் நீரில் விளக்கேற்றுமாறு மூதாட்டி கூற அவ்வாறே செய்த சிறுவர்கள் கடல் நீரில் விளக்கு எரியும் அற்புதம் கண்டு மெய்சிலிர்த்து நின்றனர்.

இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையிலேயே வைகாசிப் பொங்கல், கடல் நீரில் விளக்கெரிக்கும் வரலாற்று அற்புதம் என்பன தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. ★

# மக்கள் திரளாகக் கூடி; இன்று இரவு கோலாகலம்!

முல்லைத்தீவு, ஜூன் 12

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா உற்சவம் இன்று திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் காட்டாவிநாயகர் ஆலயத்தில் இருந்து கள்ளப்பாடு தீர்த்தக் கரைக்குச் சென்று கடலில் தீர்த்தம் எடுத்து வந்து விநாயகர் ஆலயத்தில், அந்தத் தீர்த்தத்தில் விளக்கேற்றப்பட்டு வந்தது.

தொடர்ந்து 7 நாள்கள் விளக்கேற்றி வந்த நிலையில், 8 ஆம் நாளில் ஆலயத்தில் இருந்து மடைப்பண்டங்களுடன் தீர்த்தத்தையும் அதிகாலை 3 மணிக்கு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு எடுத்துச் சென்று மடைபரப்பி தீர்த்தம் மூலம் விளக்கேற்றி பூஜை வழிபாடுகள் நடைபெறும்.

இரவு 10 மணி வரையில் பூஜைகள் நடைபெற்று பொங்கல் விழா பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கூடி இருக்கும் நிலையில் பக்தி பூர்வமாக நடைபெறும்.

இதேவேளை, உற்சவத்தை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் செய்துள்ளது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகை தரும் அடியார்களுக்கான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பக்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணுமாறும் தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் ஆலய அறங்காவலர்சபையின் தலைவர் முருகேசு குகதாசன் தெரிவித்துள்ளார். (இ)

# முஸ்லிம்களை இலக்கு வைத்துத் தாக்குதல்கள்; மௌனம் காத்து வருவதைக் கண்டிக்கிறோம்!

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து தாக்குதல்கள் நாளாந்தம் நடந்து வருகின்றன. இனவாதத் தாக்குதுல்கள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியது அரசின் கடமை. ஆனால் நல்லாட்சி அரசு மௌனம் காத்து வருவதை நல்லாட்சிக்கான தேசிய முன்னணியாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நாட்டின்தற்போதைய நிலை தொடர்பில் அந்த முன்னணியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதனை அரசு உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். தொடர்ச்சியான அழுத்தங்களுக்குப் பின்னர், தற்போது தான் ஓரிருவர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுங்கியிருக்கும் ஏனைய குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்து, நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும். மிகக் குறுகிய காலத்தில், இதுபோன்ற சம்பவங்கள் அடுக்கடுக்காக நாளாந்தம் இடம்பெற்று வருகின்றமையானது, அரசின் இயலாமையை மாத்திரமன்றி பக்கச்சார்பானநிலைப்பாட்டையே புலப்படுத்துகிறது. இந்த நிலை தொடருமாயின், இது இந்த நாட்டை மோசமானபின்விளைவுகளுக்கே இட்டுச்செல்லும்.

நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டிய சர்ச்சைக்குரியமதகுருவை, அமைச்சரவை அங்கத்தவர் ஒருவரே பாதுகாத்து வைத்துள்ளார் என்று ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார். இது இப்போது நாடெங்கும் பேசுபொருளாக மாறியுள்ளது.

புலிகளை அடக்க முடிந்த புலனாய்வுப் பிரிவுக்கு அந்த நபர் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை என்பது வேடிக்கையான விடயம் என, பலரும் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளனர்.

அரசினதும் சட்டம் ஒழுங் குக்குப் பொறுப்பான அமைச்சரினதும் பொலிஸாரினதும் இயலாமையை அப்பட்டமாக வெளிப்படுத்தும் இவ்வாறான கருத்துகளுக்கு அரசின் பதில்தான் என்ன?

இவ்வளவு நடந்தும், இதன் முக்கியத்துவத்தையும் பாதிப்பையும் குறைத்து மதிப்பிடும் வகையிலேயே அரசின் பொறுப்பான பதவிகளிலுள்ளோர் நடந்து கொள்கின்றனர். குறிப்பாக ஜனாதிபதியிடமிருந்தோ அல்லது பிரதமரிடமிருந்தோ இன்றுவரை எந்தப் பொறுப் பான பதில்களும் வரவில்லை என்பது வேதனையளிக்கிறது.

பொறுப்பும் பதிலும் கூற வேண்டியது அவர்களின் இந்த அடிப்படைக் கடமையை அவர் கள் தொடர்ந்தும் புறக்கணிப்பதை அனுமதிக்க முடியாது.

இந்த நெருக்கடியான சூழலிலும் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால், நிலைமை மேலும் சிக்கலாகி அழிவுக்கே வழி வகுக்கும். இதில் நல்லாட்சி அதிககரிசனை கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றுள்ளது. (எ)

NFGG
යහපාලන සඳහා වූ ජාතික පෙරමුණ
நல்லாட்சிக்கான தேசிய முன்னணி
National Front for Good Governance

## அரச பணியாளரை பாராட்டுகிறார் அமைச்சர் எஸ்.பி.

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவு அனர்த்தங்களின்போது அரச அதிகாரிகள் செயற்பட்ட விதம் பாராட்டத்தக்க விதத்தில் இருந்தது என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்துள்ள பொதுமக்களிடம் குற்றச்சாட்டுகள் எழுவது சாதாரண விடயம்தான்.

குறிப்பாக, இயற்கை அனர்த்தத்தில் இருப்பிடங்களை இழந்த மக்களின் மனநிலைக்கு ஏற்ப அவ்வாறான குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுவது வழக்கம்.

பாலிந்தநுவர பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அனர்த்த நிவாரணக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்க மேற்கண்டவாறு கருத்துக் கூறினார். (ம)

## மகஸின் சிறை, ரத்துபஸ்வல சூட்டுக்கு கோட்டாவே உத்தரவிட்டிருந்தாராம்!

### குற்றம் சுமத்துகிறது இடதுசாரி நிலையம்

கொழும்பு, ஜூன் 12

மகஸின்சிறைச்சாலையில் இடம்பெற்றதுப்பாக்கிச் சூடு, ரத்துபஸ்வலவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு ஆகிய இரு சம்பவங்களும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபயவின் உத்தரவுக்கு அமையவே இடம் பெற்றுள்ளது. இடதுசாரி நிலையம் குற்றம்சாட்டியுள்ளது.

மக்கள் சக்தி அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே இடதுசாரி நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குற்றமிழைத்தவர்களைவிட குற்றங்களுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

வசிம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்டதாக இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னரே உறுதியானது. அதற்கு முன்னர் அது ஒரு விபத்து என்றே கூறப்பட்டது. இது தொடர்பில் விசாரணை செய்ய அப்போதைய மஹிந்த ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர். மகஸின்சிறைச்சாலையில் பெயர் குறிப்பிட்டு 26பேர்படுகொலை செய்யப்பட்டனர். அது தொடர்பில் வழக்கு விசாரிக்கப்பட்டதா? ஆணைக் குழுவின் அறிக்கை எங்கே? கோட்டாபய ராஜபக்ஷவின் தேவைப்பாட்டுக்கு அமையவே படுகொலை செய்யப்பட்டார்கள். அது தொடர்பில் யாரும் பேசவில்லை. ஒரு குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செய்த குற்றங்களை மூடி மறைக்க முயன்றனர். எனினும், அது தொடர்பிலேயே முதலில் விசாரணைசெய்யவேண்டும். எனினும் அரசின் வேகம் போதவில்லை. அதுதொடர்பில் எமக்கு பிரச்சினை இருக்கின்றது.

அதேபோல் கடந்த காலங்களில் இடம்பெற்ற கடத்தல்களுக்கு நான் மட் டும் பொறுப்பல்ல. முன்னாள் இராணுவத் தளபதி உள்ளிட்டவர்களையும் விசாரிக்கவேண்டும் என்று கோட்டபாய கூறுகின்றார். எனவே, தான் குற்றவாளி என்பதை அவர் நிராகரிக்கவில்லை.

கடந்த காலத்தில் ரத்து பஸ்வல துப்பாக்கிச் சூடு தொடர்பில் கம்பஹா நீதிமன்றில் முன்னாள் பிரிகேடியர் அளித்துள்ள வாக்கு மூலத்தில், 'இது எனது தனிப் பட்ட விருப்பத்தில் நடைபெற்ற விடயமல்ல, எனது தேவைக்காக மேற்கொண்ட விடயமுமல்ல என அவர் குறிப் பிட்டுள்ளார். இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியது நானல்ல; எனக்குக் கிடைத்த உத்தரவுக்கு அமைய நான் செயற்பட்டேன்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த உத்தரவை பிறப்பித்தது யார்? அப்போது பாதுகாப்பு அமைச்சில் பொறுப்பாக இருந்தது யார்? கோட்டாபய ராஜபக்ஷ, அப்போதைய இராணுவத்தளபதி யார், தயாரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சர் யார் மஹிந்த ராஜபக்ஷ, எமக்குத் தெரியும் மஹிந்த ராஜபக்ஷ கோட் டபாயவிடம் கேட்காமல் எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டார். ஆகவே, கோட்டாபயவின் அறிவுறுத்தல் இல்லாமல் ரத்துபஸ்வலவில் துப்பாக்கிச் சூடு நடத்த வாய்ப்பில்லை. அவருக்கு ஏன் இவ்வளவு பயம்? ஏன் அது தொடர்பில் விசாரணை செய்ய இந்த அரசு தயங்குகின்றது?- என்றார். (எ)

## அம்புலன்ஸ் சாரதி மறைவுக்கு அமைச்சர் இரங்கல்

கிளிநொச்சியிலிருந்து நோயாளர்களை கொழும்புக்கு எடுத்துச்சென்ற போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த கிளிநொச்சியைச் சேர்ந்த யோ.தயேந்திரனின் மறைவுக்கு வடக்கு சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் இரங்கல் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நடைபெற்ற விபத்தில் அம்புலன்ஸை ஓட்டிச் சென்ற சாரதி மரணமடைந்தார் எனக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தேன்.

மற்றவர்களின் உயிரைக்காப்பாற்றும் உயரிய கடமையைச் செய்கின்ற அம்புலன்ஸ்சாரதிகள் போற்றப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் அமரர் யோ.தயேந்திரன் விபத்தில் மரணமடைந்தமை துர்ப்பாக்கியமானது. அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு விபத்தில் பாதிக்கப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கின்றேன். என்று அவர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ம)

## அனுமதியின்றி மரக்குற்றிகளை ஏற்றிய 2 பேர் வசமாகச் சிக்கினர்



அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமாக மரங்களை வெட்டி லொறியில் ஏற்றிச் செல்ல முற்பட்ட இருவரை கினிகத்தேன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கித்துல்கல மீகத்தென்ன வனப்பகுதியிலே நேற்றுமுன்தினம் இரவு மரக் குற்றியுடன் புறப்படத் தயாராக இருந்த லொறியை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் மரக் குற்றியுடனான லொறியையும் ஹற்றன் மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளனர்.

மேலும், மரக்குற்றியின் பெறுமதி தொடர்பில் வன பாதுகாப்பு அதிகாரிகளிடம் அறிக்கையை கோரியுள்ளனர். (எ)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜூன் 12

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வகை 1 ஏ பி 1 சி வகை 11 பாடசாலைகளின் அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்.-

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வலயக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

அதிபர்களை மட்டும் இதில் கலந்துகொள்ளுமாறும், அதிபர் இல்லாத பாடசாலைகளில் பொறுப்பாசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறும் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (இ)

# தமிழக உள்ளாட்சித் தேர்தலில் தனித்து போட்டியிட வேண்டும்!



## பா.ஜ.கவின் விருப்பம் இதுவே என்கிறார் தமிழிசை

நாகர்கோவில்,ஜூன் 12

தமிழக உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதே பா.ஜ.கவின் விருப்பம். தமிழகத்தில் பா. ஜ.கவை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். உள்ளாட்சித் தேர்தலை பலத்துடன் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

-இவ்வாறு தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழகத்தில் ஆரோக்கியமான எதிர்க்கட்சியாகப் பா.ஜ.க. செயற்படுகிறது. அ.தி.மு.க. அரசைப் பா.ஜ.க. இயக்குகின்றது என மு.க. ஸ்டாலின் எந்த ஓர் அடிப்படை ஆதாரமும் இல்லாமல் பேசுகிறார். எந்த ஆட்சியையும் நாங்கள் ஆட்டிப் படைக்கவோ, அதிகாரத்தை செயற்படுத்தவோ இல்லை. தனது முதல்வர் கனவு தகர்ந்துவிடுமோ என்ற அச்சத்திலேயே மு.க.ஸ்டாலின் தவறான கருத்துக்களைக் கூறி வருகிறார். முறையான எதிர்க்கட்சியாக மு.க.ஸ்டாலின் செயற்படவில்லை. அவர் அ.தி.மு.கவை எதிர்ப்பதைவிட பா.ஜ.கவைத்தான் அதிகம் எதிர்க்கிறார். தி.மு.க. தலைவர் கருணாநிதியின் வைர விழாவில் கூட பிரதமர் மோடியைக் குறை கூறிப் பேசியுள்ளார்.

ஆட்சி வேறு, கட்சி வேறு. கட்சி ரீதியில் நாங்கள் அ.தி.மு.கவை எதிர்க்கிறோம். ஆட்சியில் முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறோம். ஜனநாயகத்துக்குப் புறம்பாக பா. ஜ.க. ஒருபோதும் செயற்பாடாது. மத்திய அரசு தேவையான உதவியை மாநில அரசுக்குச் செய்து வருகிறது. ஜனாதிபதித் தேர்தலில் அ.தி.மு.கவின் ஆதரவு யாருக்கு என்பதை முதலமைச்சரும், கட்சியின் முக்கிய நிர்வாகிகளும்தான் தெரிவிக்கவேண்டும்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவை அமைச்சர்கள் சந்திப்பது தவறு. கட்சி ரீதியாக அவரை யாராவது சந்தித்துப் பேசலாம். ஆட்சி ரீதியாகச் சந்திப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழகத்தில் லஞ்சத்தை ஒழிக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அ.தி.மு.க. ஆட்சி நீடிக்குமா? என்பது முதலமைச்சரின் கையில் தான் உள்ளது. மக்கள் விரோதப் போக்கைக் கடைப்பிடித்தால் ஆட்சி நீடிக்காது. அ.தி.மு.கவில் கோஷ்டிப் பூசல் உள்ளது. கட்சியில் உள்ள குழப்பத்தரல் ஆட்சிக்குப் பாதிப்பு வந்துவிடக் கூடாது . -என்றார். (ச)

## குட்டிப் பிரபஞ்ச அழகியாக ஒடிசா சிறுமி தேர்வானார்!

புதுடில்லி, ஜூன் 12

குட்டிப் பிரபஞ்ச அழகியாக ஒடிசாவைச் சேர்ந்த சிறுமி ஒருவர் தேர்வாகி உள்ளார்.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பத்மாலயா நந்தா (வயது-12) என்ற சிறுமியே குட்டிப் பிரபஞ்ச அழகியாகத் தேர்வானவர் ஆவார்.

கட்டாக்நகரில் உள்ள ஒரு பாடசாலையில் 8 ஆம் தரத்தில் கற்கும் இவர், ஜோர்ஜியா நாட்டின் பதுமி நகரில் நடைபெற்ற போட்டியில் குட்டிப் பிரபஞ்ச அழகியாக ('லிட்டில் மிஸ் யுனிவர்ஸ்') தேர்வாகிச், சரித்திரம் படைத்துள்ளார். இந்தப் போட்டியில் இந்தியச் சிறுமி ஒருவர் பட்டம் வெல்கின்றமை இதுவே முதல்முறை ஆகும்.

இந்தப் போட்டியின் முதல் சுற்று 'ஒன்லைனில்' நடைபெற்றது. உலகம் முழுவதும் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்தனர். இதில், 75 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் 10 பேர் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகினர்.

ஒவ்வொருவரும் பல சுற்றுப் போட்டிகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்தப் போட்டிக்கு நடுவர்களே கிடையாது. பார்வையாளர்கள் ஒன்லைன் மூலம் வாக்களித்து வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

இந்தப் போட்டியில் வென்ற பத்மாலயா நந்தாவுக்குத் தங்கக் கிரீடம் சூட்டப்பட்டது. அடுத்த ஆண்டு போட்டி நடைபெறும்வரை, அந்தக் கிரீடத்தை அவர் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கிரீஸ் நாட்டில் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள 'குட்டி உலக அழகி' போட்டியில் பத்மாலயா நந்தா கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



## போயஸ் தோட்ட இல்லத்துக்கு தீபா நேற்றுத் திடீர் பிரவேசம்!

### உரிமை கோரியமையால் பரபரப்பு



போயஸ் தோட்ட வளாகத்துக்குள்திடீரென பிரவேசித்து,மேற்படியான இல்லத்துக்கு ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா உரிமை கோரியமையால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திடீரென போயஸ் இல்லத்துக்குச் சென்ற தீபா, போயஸ் இல்லம் தனக்குத்தான் சொந்தம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, அங்கு பாதுகாப்பு பணியிலிருந்த பொலிஸார், தீபாவை உள்ளே அனுமதிக்க மறுப்புத் தெரிவித்த நிலையில், அவர்களுடன் தீபா வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதன்னை அடுத்து, பொலிஸார் தீபாவுக்கு இல்லத்துக்குள் நுழைய அனுமதி மறுத்துள்ளனர்.

தீபாவின் சகோதரர் தீபக், போயஸ் இல்லத்தில் குடியேறப் போகிறார் எனக் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தகவல் வெளியானது. இதற்கிடையில் ஜெயலலிதாவின் வீட்டை நினைவு இல்லமாக மாற்ற தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது எனவும் கூறப்பட்டது.

இதேவேளை, ஜெயலலிதாவின் சொத்துக்களை அரசுடைமையாக்க நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், போயஸ் இல்லத்துக்கு தீபா உரிமை கோரியுள்ள சம்பவம் , பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ச)

## சசிகலா விரைவில் மீண்டு வருவார்!

### கணவர் நடராஜன் கூறுகின்றார்

சொத்துக் குவிப்பு வழக்கின் சீராய்வு மனுவில் நீதி கிடைக்கும். எனது மனைவி சசிகலா சிறையில் இருந்து விரைவில் மீண்டு வருவார் என அவரது கணவர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஊழல்வழக்கில் எனது மனைவியும், குடும்பத்தினரும் தவறான முறையில் தண்டனை பெற்றுள்ளனர். எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் அணியினர் இன்னும் ஒரு வாரத்தில் இணைவார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஜெயலலிதா அ.தி.மு.கவின் தலைவராக வருவதற்கு நாங்கள்தான் பின்னணியில் இருந்தோம். எம்.ஜி. ஆர். மரணச் சடங்கில் ஜெயலலிதாவைக் கீழே தள்ளிவிட்டார்கள். சசிகலா தான் அவரைத் தாங்கிப் பிடித்தார்.

ஜெயலலிதா சபாநாயகருக்கு எழுதி வைத்திருந்த ராஜினாமாக் கடிதத்தை கருணாநிதி அரசு கைப்பற்றியது. பின்னர் ஜெயலலிதா கைது செய்யப்பட்டார். அந்த நேரத்தில் தனது வீட்டில் உள்ள யாரிடமும் பேசக்கூடாது என்று என்னிடம் ஜெயலலிதா கூறினார். நான் சுயமரியாதை இயக்கத்தை சேர்ந்தவன். எனவே, நான் வெளியேறி விட்டேன். சசிகலா தொடர்ந்தும் அங்கு இருந்தார்.

இந்த நேரத்தில் நாங்கள் அவருக்கு எதிராகச் செயற்படுகிறோம் என பொலிஸார் கொடுத்த அறிக்கையை நம்பி ஜெயலலிதா 2011 ஆம் ஆண்டு கட்சியைவிட்டு எங்கள் குடும்பத்தினரை நீக்கினார். அதனால் ஏற்பட்ட பாதிப்பு சரி செய்யப்பட வில்லை. -என்றார். (ச)

## வடக்கு,மேற்கு மாநிலங்களில் விபத்துக்கள்: 19 பேர் உயிரிழப்பு: 22 பேர் படுகாயம்!

இந்தியாவின் வடக்கு மற்றும் மேற்கு மாநிலங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இருவேறு வாகன விபத்துக்களில் 19 பேர் உயிரிழந்தனர்; 22 பேர் படுகாயமடைந்தனர்.

உத்தரப்பிரதேசம் - மதுரா நகரில் கார் ஒன்று ஆற்றுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில், 5 பெண்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

கார் சாரதி தலைமறைவாகியுள்ளார். இந்த நிலையில், அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மகாராஷ்ட்ரா பீட் மாவட்டத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். 22 பேர் படுகாயமடைந்தனர்.

புனேவிலிருந்து 31 பயணிகளுடன் லட்டூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ், 20 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. படுகாயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

# தீவிரவாதத்துக்கு நிதி அளிப்பதை கட்டார் உடனே நிறுத்த வேண்டும்!

**அமெ. ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை**

வொஷிங்டன், ஜூன் 12

தீவிரவாதத்துக்கு நிதி உதவி அளிப்பதைக் கட்டார் உடனே நிறுத்த வேண்டும் .

-இவ்வாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கட்டார் விவகாரம் தொடர்பில் வொஷிங்டனில் வைத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெறுப்புணர்வைக் கைவிட வேண்டும். அப்பாவிகளைக் கொல்வதை உடனே நிறுத்த



வேண்டும். கட்டாருடன் அண்டை நாடுகள் இராஜதந்திர உறவைத் துண்டித்திருக்கின்றமை கடினமான முடிவு. ஆனால், அதைத் தவிர வேறு வழியில்லை. அண்மையில் நடந்த 50 அரபு நாடுகளின் மாநாட்டில் தீவிரவாதத்துக்கு நிதியுதவி அளிப்பதை நிறுத்துமாறு நான் வேண்டுகோள்விடுத்திருந்தேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

தீவிரவாதத் தாக்குதல்களால் உலக நாடுகள் மிகப்பெரிய சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், தீவிரவாதத்துக்குத் துணைபோவதோடு, அதற்கான நிதியுதவிகளையும் கட்டார் வழங்குகிறது எனக் குற்றஞ் சுமத்தி சவூதி அரேபியா, எகிப்து மற்றும் பஹ்ரேன், ஐக்கிய அரபு இராஜ்ஜியம் போன்ற வளைகுடா நாடுகள் பல கட்டாருடனான இராஜதந்திர உறவைத் துண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

கட்டாரின் அல்-உதெய்ட் நகரில் அமெரிக்க விமானப் படைத்தளம் உள்ளது. இது, ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான வான்வழித் தாக்குதலின் கட்டுப்பாட்டு மையமாக விளங்குகிறது. எனவே கட்டார் விவகாரத்தில் பொறுமை காக்கும்படி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் வளைகுடா நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ட்ரம்பின் மகன் மீது நிதி மோசடி முறைப்பாடு!



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் மகனான எரிக் ட்ரம்பின் மீது நிதி முறைகேடு முறைப்பாடு எழுந்துள்ளது.

ஏற்கெனவே, டொனால்ட் ட்ரம்பின் அறக்கட்டளை தொடர்பில் எரிக் ஸ்னெய்டர்மேன் எனும் நியூயார்க் மாகாண அரசு வழக்கறிஞர் பல மாதங்களாக விசாரணை மேற்கொள்கிறார். இந்த நிலையில், நன்கொடையாளர்கள் எரிக் ட்ரம்ப் அறக்கட்டளை நிலையத்துக்கு வழங்கிய நிதியை, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட செய்ன்ட் ஜூட் பள்ளிக் குழந்தைகளுக்கு முழுவதும் வழங்குகிறேன் எனக்கூறிவிட்டு, அந்த நிதியில் 10 லட்சம் டொலரை, ட்ரம்பின் கோல்ப் விளையாட்டு மைதானத்துக்கும், பிற நிறுவனங்களுக்கும் வழங்கியுள்ளார் என அவர் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது.

அதிபர் ட்ரம்ப்பின் மருமகனை அடுத்து, மகன் மீது மோசடி முறைப்பாடு எழுந்துள்ளமை அமெரிக்க அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ச)

## பிரித்தானியாவுடன் பேச்சு நடத்தத் தயார்!

### ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா அறிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்குத் தயாராகவுள்ள பிரித்தானியாவுடன் பேச்சு நடத்தத் தயார் என்று ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா தெரிவித்துள்ளார்.



ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் மெக்சிகோ சென்றுள்ளார். அங்கு அவர் அந்த நாட்டின் அதிபர் என்ரிக் பெனா நீட்டோவுடனான சந்திப்பை அடுத்து, நிருபர்களைச் சந்தித்தார். அதன்போது கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுகிற முடிவில் பிரித்தானியா விடாப்பிடியாக இருக்கும் என்று கருதுகிறேன். பிரித்தானியப் பிரதமர் இது தொடர்பான பேச்சைத் தொடங்கும் திட்டத்தில் இருப்பார். நாங்களும் விரைவாக பேச்சு நடத்தவே விரும்புகிறோம். குறிப்பிட்ட கால அட்டவணைப்படி பேச்சு நடந்து முடிய வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறினாலும், பிரித்தானியா ஐரோப்பாவின் ஓர் அங்கம்தான். அந்த நாடு நல்லதொரு கூட்டாளியாகத் தொடர வேண்டும் என்று விரும்புகிறேன்' என அவர் மேலும் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறும் நடவடிக்கையை தொடங்குகிறபோது, தனது பெரும்பான்மையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரித்தானியப் பிரதமர் தெரசா மே கருதினார். இதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு திடீர்த் தேர்தல் நடத்தினார். ஆனால், அவரது கனவு நிறைவேறவில்லை. இருந்த பெரும்பான்மையையும் அவர் இழந்தார்.

இந்த நிலையில், 'பிரெக்சிற்' என்று அழைக்கப்படுகிற ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுகிற நடவடிக்கையை பிரித்தானியா தொடங்குவதில் சிக்கல் நேரக்கூடும் என்று கருதப்படுகிறது. (ச)

## பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு இலங்கைத் தமிழ்ப் பெண் தெரிவு!

பிரித்தானியாவில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை வம்சாவளி பெண்ணொருவர் வெற்றி பெற்றுள்ளார்.

தொழிற்கட்சி சார்பில் பிரிஸ்டல் மேற்குத் தொகுதியில் போட்டியிட்ட தங்கம் டெபோனயர் என்ற இலங்கைப் பெண்ணே இவ்வாறு வெற்றிபெற்றுள்ளார்.



இவர் 47213 வாக்குகளைப் பெற்றுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் 9877 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

தங்கம் டெபோனயர் இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த பெண் ஆவார். தங்கம் டெபோனயரின் தந்தை ஓர் இலங்கைத் தமிழர். அவரது தாய் பிரித்தானிய வெள்ளை இனப் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

**பாக். மக்கள் தொகை அதிகரிப்பு:**

## 96 குழந்தைகளுக்கு தந்தையரான மூவர்!

பாகிஸ்தானில் மக்கள் தொகை பெருக்கம் மின்னல் வேகத்தில் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், அங்கு மூன்று ஆண்கள், 96 குழந்தைகளுக்குத் தந்தையர்களாகி உள்ளமை கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.



பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் உள்ள பன்னுவை சேர்ந்தவர் குல்ஜார் கான். இவருக்கு மூன்று மனைவியர் மூலம், 36 குழந்தைகள் பிறந்துள்ளன. இவரின் மூன்றாவது மனைவி, இப்போது கர்ப்பமாக உள்ளார்.

கானின் சகோதரர், வாஸீருக்கும் 22 குழந்தைகள் உள்ளன.

இதேபோல பலுசிஸ்தான் மாநிலம் குவெட்டாவை சேர்ந்த ஜன் முகமது என்பவருக்கு மூன்று மனைவியர் மூலம் 38 குழந்தைகள் உள்ளன.

பாகிஸ்தானில் 1998 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 13.5 கோடியாக இருந்தது. 18 ஆண்டுக்குப் பின் அங்கு மக்கள் தொகை மீண்டும் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டத் தகவலின்படி பாகிஸ்தானின் மக்கள் தொகை 20 கோடியை நெருங்கிவிட்டமை குறிப்பிடத்தக்கது.

ஓர் ஆண் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்வதற்குப் பாகிஸ்தானில் சட்ட அனுமதி உள்ளது. (ச)

## தேர்தலில் தெரேசாமேக்கு பின்னடைவு: பிரதமரின் இரு ஆலோசகர்கள் ராஜினாமா!

பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில் ஆளுங்கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டதையடுத்து, பிரதமர் தெரசா மேயின் இரண்டு முக்கிய ஆலோசர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர்.

பிரித்தானியாவில் சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சிக்கும் கடும் போட்டி நிலவியது. மொத்தம் உள்ள 650 இடங்களில் கன்சர்வேட்டிவ் கட்சி 318 இடங்களிலும், தொழிலாளர் கட்சி 262 இடங்களிலும் வென்றது. ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மை எந்தக் கட்சிக்கும் கிடைக்காமையால், வடக்கு அயர்லாந்தின் டி.யு.பி. கட்சி



யுடன் கூட்டணி அமைத்து கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியமைக்க உள்ளது. தெரேசா மே மீண்டும் பிரதமராகப் பதவியேற்க உள்ளார்.

இந்த நிலையில், தேர்தலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பொறுப்பேற்று பிரதமர் தெரேசா மேயின் நெருங்கிய ஆலோசகர்களான திமோதி மற்றும் ஹில் ஆகியோர் நேற்றுத் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்தனர். கூட்டுத் தலைவர்களில் நம்பிக்கைக்குரிய தலைவர்களாக விளங்கிய இருவரும் மிகப் பெரிய வெற்றி பெறுவோம் என்று பிரதமரிடம் கூறி வந்த நிலையில், பெரும்பான்மை பெறமுடியவில்லை.

இதற்கு முக்கிய காரணம் தேர்தல் அறிக்கைதான் என்று கூறப்படுகிறது. கட்சியின் தேர்தல் அறிக்கையில் உள்ள முக்கிய அம்சங்களுக்கு எம்.பிக்கள் அதிருப்தி தெரிவித்தனர். (ச)

# சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட்: இங்கிலாந்திடம் தோற்றுப் போனதால் சுற்றுப்போட்டியில் இருந்து ஆஸி 'அவுட்'

சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட்டில் இங்கிலாந்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாழ்வா-சாவா ஆட்டத்தில் தோல்வி அடைந்த ஆஸ்திரேலியா சுற்றுப் போட்டியை விட்டு வெளியேறியது.

**பிஞ்ச், ஸ்மித் அரைச்சதம்**

சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட்டில் பேர்மிங்காமில் சனியன்று நடந்த 10 ஆவது லீக்கில் இங்கிலாந்து- ஆஸ்திரேலிய அணிகள் (ஏ பிரிவு) சந்தித்தன.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன், முதலில் ஆஸ்திரேலியாவைத் துடுப்பெடுத்தாடும் படி பணித்தார்.

இதையடுத்து, துடுப்பாட்டத்தைத் தொடங்கிய ஆஸ்திரேலியாவுக்கு 40 ஓட்டங்களில் முதல் விக்கெட் விழுந்தது. வோர்னர் 21 ஓட்டங்களில், மார்க்வுட்டின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் ஜோஸ் பட்லரிட்ம் பிடி கொடுத்தார்.

இதன் பின்னர் ஆரோன் பிஞ்சும், அணித் தலைவர் ஸ்டீவன்ஸ்மித்தும்கைகோத்து நேர்த்தியாக விளையாடினர். இவர்கள் ஆடிய விதத்தை பார்த்த போது எப்படியும் ஆஸ்திரேலியா 300 ஓட்டங்களை எளிதில் தாண்டும் போல் தெரிந்தது. ஓட்ட எண்ணிக்கை 136 ஆக (22.5 ஓவர்) உயர்ந்த போது இந்த ஜோடி பிரிந்தது. ஆரோன் பிஞ்ச் 68 ஓட்டங்களில் (64 பந்து, 8 பவுண்டரி) பிடி கொடுத்தார்.

அடுத்து இறங்கிய ஹென்ரிக்ஸ் 17 ஓட்டங்களிலும், அணித் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் 56 ஓட்டங்களிலும் (77 பந்து, பவுண்டரி) வெளியேறினர். அதன் பிறகு சுழற்பந்து வீச்சாளர் அடில் ரஷித் அடுத்தடுத்து 'செக்' வைக்க ஆஸ்திரேலியாவின் ஓட்ட வேகத்துக்கு முட்டுக்கட்டை விழுந்தது.

மக்ஸ்வெல் (20 ஓட்டங்கள்), மேத்யூ வேட் (2 ஓட்டங்கள்), மிட்செல் ஸ்டார்க் (0) கம்மின்ஸ் (4 ஓட்டங்கள்), ஆடம் ஸம்பா (0) ஆகியோர் வரிசையாக நடையைக் கட்டினர். இதற்கு மத்தியில் டிராவிஸ் ஹெட் மட்டும் நிலைத்து நின்று ஆஸ்திரேலியாவின் புள்ளியை முடிந்தவரை கணிசமாக உயர்த்தினார்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆஸ்திரேலிய அணி 9 விக்கெட் இழப்புக்கு 277 ஓட்டங்களைச் சேர்த்தது. டிராவிஸ் ஹெட் 71 ஓட்டங்களுடன் (64 பந்து, 5 பவுண்டரி, 2 சிக்ஸர்) களத்தில் இருந்தார். கடைசி 10 ஓவர்களில் ஆஸ்திரேலியா 5 விக்கெட்டுகளை இழந்து 55 ஓட்டங்களை மட்டுமே எடுத்தமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் மார்க்வுட், சுழற்பந்து வீச்சாளர் அடில் ரஷித் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

அடுத்துக் களம் இறங்கிய இங்கிலாந்து அணி தொடக்கத்தில் திணறியது. ஜாசன் ராய் (4 ஓட்டங்கள்), அலெக்ஸ் ஹாலெஸ் (0), ஜோ ரூட் (15 ஓட்டங்கள்) ஆகியோர் ஆஸ்திரேலியாவின் வேகத்தில் வீழ்ந்தனர். 35 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்ததால் ஆஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் உற்சாகத்தில் திளைத்தனர்.

ஆனால் அவர்களின் மகிழ்ச்சியை அணித்தலைவர் இயான் மோர்கனும், ஓல்-ரவுண்டர் பென்ஸ்டோக்ஸும் இணைந்து சீர்குலைத்தனர். எதைப் பற்றியும் கவலைப்படாமல் அதிரடியில் கலங்கடித்த இவர்கள் அணியையும் வெற்றி நோக்கி பயணிக்க வைத்தனர். அணியின் நிலை 194 ஓட்டங்களாக உயர்ந்த போது மோர்கன் (87 ஓட்டங்கள், 81 பந்து, 8 பவுண்டரி, 5 சிக்ஸர்) ஆட்டமிழந்தார்.

சிறிது நேரத்தில் ஸ்டோக்ஸ் 3 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். இங் கிலாந்து 40.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 240 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்த நிலையில், பலத்த மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. அப்போது ஸ்டோக்ஸ் 102 ஓட்டங்களுடனும் (109 பந்து, 13 பவுண்டரி, 2 சிக்ஸர்), ஜோஸ் பட்லர் 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். தொடர்ந்து மழை பெய்ததால் டக்வார்த்-லூயிஸ் விதிமுறை கடைபிடிக்கப்பட்டது. 40.2 ஓவர்களில் இங்கிலாந்துக்கு 201 ஓட்டங்களே போதுமானதாக இருந்தது. அதனால் இங்கிலாந்து 40 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது என அறிவிக்கப்பட்டது.

ஏ பிரிவில் முதல் இரு இடங்களை பிடித்த இங்கிலாந்து (6 புள்ளி), பங்களாதேஷ் (3 புள்ளி) அரை இறுதிக்குள் நுழைந்தன. ஒரு வெற்றியும் பெறாத ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகியன வாய்ப்பை இழந்து வெளியேறின.

**ஆஸியின் பரிதாபம்**

ஆஸ்திரேலிய அணி 2013 ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணத்தில் ஒரு வெற்றியும் பெறாமல் முதல் சுற்றுடன் நடையைக் கட்டியது. தற்போதைய சம்பியன்ஸ் கிண்ணத்திலும் அதே பரிதாபம் ஏற்பட்டு இருக்கிறது. மழையால் 2 ஆட்டங்களில் முடிவில்லை, ஒரு தோல்வி என்று வெற்றி ஏதும் பெறாமல் நடையைக் கட்டுகிறது.

இந்த சம்பியன்ஸ் கிண்ணத்தைப் பொறுத்தவரை இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் அரை இறுதிக்கு வரும் என்பது பெரும்பாலானவர்களின் கருத்து கணிப்பாக இருந்தது. அந்தக் கணிப்பும் பொய்த்து விட்டது.

உலக சம்பியனான ஆஸ்திரேலியா லீக் சுற்றைத் தாண்டவில்லை. இந்தியா அல்லது தென்னாபிரிக்கா ஆகிய அணிகளில் ஒன்று வெளியேற்றப்படுவதும் உறுதி. அதே சமயம் கண்டுகொள்ளப்படாத பங்களாதேஷ் முதல் முறையாக அரை இறுதியை எட்டி ஆச்சரியப்படுத்தியுள்ளது.




ஏ பிரிவில் முதல் இரு இடங்களை பிடித்த இங்கிலாந்து [6 புள்ளி], பங்களாதேஷ் [3 புள்ளி] அரை இறுதிக்குள் நுழைந்தன. ஒரு வெற்றியும் பெறாத ஆஸ்தி ரேலியா, நியூஸிலாந்து ஆகியன வாய்ப்பை இழந்து வெளியேறின.

இந்த லீக்கில் இங்கிலாந்து அணி, ஆஸ்திரேலியாவை வீழ்த்தினால் மட்டுமே பங்களாதேஷுக்கு அரை இறுதி வாய்ப்புக் கிட்டும் என்ற நிலைமை இருந்தது. பங்களாதேஷ் வீரர்கள், ரசிகர்களின் பிரார்த்தனை வீண் போகவில்லை.

ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்திடம் பணிந்து விட்டதால் பங்களாதேஷுக்கு அரை இறுதிக் கதவு திறந்துள்ளது.



## போர்த்துக்கல் வெற்றி; ரொனால்டோ அபாரம்!

உலக கிண்ணத் தகுதிச் சுற்றில் போர்த்துக்கல் அணி, 3-0 என லாட்வியா அணியை வென்றது. ரொனால்டோ 2 கோல் அடித்தார்.


உலகக் கிண்ண உதைபந்தாட்டம் 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடக்கவுள்ளது. இதற்கான ஐரோப்பிய நாடுகளுக்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் சொந்தமண்ணில் லாட்வியா அணி போர்த்துக்கல்லைச் சந்தித்தது.

போட்டியின் 41, 63 ஆவது நிமிடங்களில் கிறிஸ்டியானோ ரொனால்டோ கோல் அடிக்க, 2-0 என போர்த்துக்கல் முன்னிலை பெற்றது.

இதையடுத்து, தேசிய அணிக்காக அவர் அடித்த கோல் எண்ணிக்கை 73 (139 போட்டி) ஆக உயர்ந்தது. 67 ஆவது நிமிடம் ஆன்ட்ரி சில்வா ஒரு கோல் அடித்தார்.

லாட்வியா அணி வீரர்களால் பதிலுக்கு ஒரு கோல் கூட போட முடியவில்லை. முடிவில், போர்த்துக்கல் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(உ)



# திரிசங்கு நிலையில் முதல்வர்!

வடக்கு மாகாணசபையின் அமைச்சர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும், அவை தொடர்பான விசாரணையின் முடிவுகளும், முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அமிலப் பரிசோதனையாக மாறியிருக்கின்றன.

சபை உறுப்பினர்களின் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களைப் புறக்கணிக்க முடியாமல், தானே நியமித்த அமைச்சர்களுக்குஎதிராக, விசாரணைக் குழுவொன்றை நியமிக்க வேண்டிய நிலை முதலமைச்சருக்கு ஏற்பட்டிருந்தது.

அரசியல் ரீதியாக இது அவரது முதல் தோல்வி. ஆனால், வெளிப்படைத்தன்மையான நிர்வாகம், பொறுப்புக்கூறலில் உறுதியாக அவர் இருக்கின்றமையையும் அவரது இந்த முடிவு காட்டி நின்றது.

விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டதும், அதில் கூறப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது என்பது முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு மிகப்பெரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த விசாரணை அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவது, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது ஆகிய இரண்டு விடயங்களிலும், தீர்க்கமான ஒரு முடிவுக்கு வர முடியாதவராக முதலமைச்சர் இருக்கிறார் என்பதை அவர், வடக்கு மாகாண சபையில் ஆற்றிய உரை தெளிவாக்கியிருக்கிறது.

## விசாரணைக் குழுவின் நம்பகத் தன்மை

விசாரணைக்குழு, அதன் அறிக்கை, அடுத்த கட்டம் - இந்த மூன்று விடயங்களிலும், முதலமைச்சருக்கு குழப்பங்கள் இருக்கின்றன என்பது தெரிகிறது. பொதுவாகவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விசாரணைக் குழுக்களை அமைக்கும்போது, அதன் நம்பகத்தன்மையும் முக்கியத்துவமானது.

விசாரணைக்குழுக்களின் உறுப்பினர்கள் பக்கசார்பற்றவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், அதேவேளை, முதலமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டமை போன்று பிறரைக் குற்றம்சாட்டத் தகுதியானவராகவும் இருக்க வேண்டும்.

இவையெல்லாம் பொதுவாக ஒரு விசாரணைக்குழுவிடம் எதிர்பார்க்கப்படும் விடயங்கள். அவ்வாறான ஒரு விசாரணைக் குழுவையே, முதலமைச்சர் நியமித்தாரா என்பது முதலாவது விடயம்.

ஏனென்றால், வடக்கு மாகாண சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கில், குறித்த விடயம் தொடர்பாக எதிர்த்தரப்பு சார்பில் சட்டத்தரணியாக முன்னிலையாகும் ஒருவர், அதேவிடயம் தொடர்பான விசாரணையில் நீதிபதியாகப் பங்கேற்றிருக்கின்றார் என்று அமைச்சர் ஐங்கரநேசன் கூறியிருக்கிறார்.

அடுத்து, விசாரணைக்குழுவில் இடம்பெற்றிருந்த ஓர் உறுப்பினர், அரச சேவையில் இருந்த காலத்தில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்தான். அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத போதிலும், அவர் கூட இதுபோன்ற ஒரு சூழலை எதிர்கொண்டவர்தான் என்பதையும் மறந்து விடலாகாது.

நம்பகமான ஒரு விசாரணைக் குழுவில் இது போன்ற பாதகமான அம்சங்கள் இருக்கின்றமை ஒட்டுமொத்த முயற்சியையும் வீணடித்து விடும். முதலமைச்சர் அமைத்துள்ள விசாரணைக் குழுவில், இருக்கக் கூடிய இன்னும் பல ஓட்டைகள் வரும் நாள்களில் வெளிவரக் கூடும்.

## அறிக்கை

அடுத்து விசாரணைக்குழுவின் அறிக்கை, முற்றிலும் சரியானதா - நம்பகமானதா என்ற கேள்வி முதலமைச்சருக்கே இருப்பதாக தெரிகிறது.

இந்த விசாரணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர்கள் கேள்வி எழுப்பியிருந்தாலும், விசாரணைக் குழு நியாயமான விசாரணைகளை நடத்தியிருந்தது என்றே முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியிருந்தார்.

ஆனாலும், அவரும் கூட, அறிக்கையில் சில தகவல்கள் தவறாக இடம்பெற்றுள்ளன என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார். தான் பங்கேற்காத கூட்டம் ஒன்றில், பங்கேற்றார் என விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

அதேவேளை, அவையில் விளக்கமளித்த, அமைச்சர் ஐங்கரநேசன், தாம் கூறிய விடயங்கள் சிலவற்றை விசாரணைக் குழு கவனத்தில் எடுக்கவில்லை என்றும், கூறாதவற்றை கூறினேன் எனக் குறிப்பிட்டிருப்பதாகவும், குற்றம்சாட்டியிருக்கிறார்.

இந்தக் கட்டத்தில், விசாரணைக் குழுவின் அறிக்கை நூற்றுக்கு நூறு வீதம் சரியானது என்பதை உறுதிப்படுத்தக் கூடிய நிலையில், முதலமைச்சரும் இல்லை என்பதே உண்மை.

விசாரணைக் குழு ஒன்றின் அறிக்கையில், தரவுகளும், தகவல்களும், முற்றிலும் சரியானவையாக இருக்க வேண்டும். ஏனென்றால், குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும்போது, குற்றம்சாட்டப்படும் ஒருவர், தன்னை நிரபராதி என்று கூறித் தப்பித்துக் கொள்வதற்கு இது போன்ற தவறுகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அதேவேளை, இதுபோன்ற தவறுகளின் காரணமாக, நிரபராதியான ஒருவர், குற்றவாளியாக்கப்படும் நிலையும் ஏற்படக் கூடும். ஓய்வுபெற்ற நீதிபதிகளான இரண்டு பேர் விசாரணைக் குழுவில் இடம்பெற்றிருந்தும், சுட்டிக்காட்டத்தக்க தவறுகள் சில அறிக்கையில் இருக்கின்றன என முதலமைச்சரும், அமைச்சரும் கூறியிக்கின்றமை கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது, அமைச்சர்களுக்கு எதிராகக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், முற்றிலும், தவறானவை என்ற முடிவுக்கு வர முடியாவிடினும், அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை தமது அறிக்கையில் எந்த வழுக்களுமின்றி முன்வைக்கும் வகையில் விசாரணைக் குழு செயற்பட்டிருக்கவில்லை என்றே கருதவேண்டியிருக்கிறது.

## முதலமைச்சருக்கு உள்ள நெருக்கடி

இப்படியான நிலையில் தான், இந்த விசாரணை அறிக்கையை வைத்து அடுத்த கட்டம் குறித்து தீர்மானிப்பதில் முதலமைச்சர் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கிறார். ஓய்வுபெற்ற நீதியரசரான முதலமைச்சர், இந்த விடயத்தில் எந்த தவறையும் தான் இழைத்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்.

ஏனென்றால், நீதிமன்றத்தில் அவர் முன்னர் அளித்த தீர்ப்புகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருந்தால் அது அவரது தனிப்பட்ட புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தியிருக்காது.

அரசியல் வாழ்வில் அவர் தவறான முடிவை எடுத்தால், அது அவருக்குப் பாதகமாகவே அமைந்து விடும். இந்த விடயத்தில் தானே முடிவை எடுக்கும் அதிகாரம் கொண்டவர் என்பதை முதலமைச்சர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஏனென்றால் இது அவர் நியமித்த விசாரணைக் குழு. அதன் அறிக்கையின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அவருக்கே அதிகாரமும் இருக்கிறது. இருந்தாலும், குற்றம்சாட்டப்பட்ட அமைச்சர்கள் மீது அவரால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

அவர்களைப் பதவியில் இருந்து விலகுமாறு கோர முடியவில்லை. ஏனென்றால், அவர்கள், முதலமைச்சரால் நியமிக்கப்பட்டவர்கள். தாமே நியமித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது, ஒரு வகையில் நீதியான செயற்பாடு என்று வெளிப்படையாக கூறப்பட்டாலும், இன்னொரு பக்கத்தில், அவருக்கும் இதில் பொறுப்பு உள்ளதுதானே என்ற விமர்சனங்களையும் எதிர்கொள்ள வேண்டி வரும்.

முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும், குற்றச்சாட்டுக்குள்ளான அமைச்சர்களினது கருத்துக்களை அறிந்தும், சபை உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்துமே தாம் முடிவெடுப்பார் என முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

விசாரணைக் குழு மற்றும் அதன் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சிலவற்றினால், ஒட்டுமொத்த விசாரணை அறிக்கையும் தவறு என்று சுட்டிக்காட்டப்படக் கூடிய நிலை உள்ளதைக் கருத்தில் கொண்டே, அவசரப்பட்டு முடிவெடுக்க முடியாத நிலை முதலமைச்சருக்கு இருக்கிறது.

## பகிரங்கப்படுத்தல்

இன்னொரு பக்கத்தில், இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவதற்கு முதலமைச்சர் தயங்குகிறார். அறிக்கையை பகிரங்கப்படுத்துவது மாகாணசபைக்கே களங்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் கூறியிருக்கிறார்.

அதனால், ஊடகங்கள் அனுமதிக்கப்படாத மூடிய அறைக்குள் விவாதித்து இந்த விவகாரத்துக்கு முடிவெடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

முதலமைச்சரின் இந்தக் கோரிக்கையானது உண்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்ற கொள்கைக்கு முரண்பாடானது. உண்மை, வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல் என்பன பொதுவாழ்வில் உள்ள அனைவருக்கும் பொதுவானவை.

எனவே நீதியானதாக மேற்கொள்ளப்பட்ட ஒரு விசாரணை என்றால், அந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துவதில் தவறில்லை.

இந்த விசாரணைக்குழு முதலமைச்சர்தனக்கு ஆலோசனை கூறுவதற்காக அமைத்துக் கொண்டது தானே தவிர, வடக்கு மாகாணசபையால் அமைக்கப்பட்டதல்ல.

அந்தக் காரணத்தை வைத்து, அறிக்கையைப் பகிரங்கப்படுத்தாமல் விடுவதற்கு முதலமைச்சர் முயற்சிக்கிறார் எனத் தெரிகிறது. ஆனால், 2010ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் இலங்கையில் போர்க் குற்றங்கள் நடந்துள்ளனவா என்று தமக்கு ஆலோசனை கூறுவதற்காக அமைத்த நிபுணர் குழுவின் அறிக்கையை அவரே பகிரங்கப்படுத்தினார்.

அதன் அடிப்படையில் தான் இலங்கைக்கு எதிரான நகர்வுகள் ஜெனீவாவில் முன்னெடுக்கப்பட்டன. மத்திய அரசாங்கம் அமைத்த விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்றும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் முதலமைச்சரே பலமுறை குற்றச் சாட்டுக்களைக் கூறியிருக்கிறார்.

அப்படியிருக்கும்போது, இந்த விசாரணை அறிக்கையை மாத்திரம், அவர் பகிரங்கப்படுத்தாமல் வைத்திருப்பது நியாயமற்றது. அதைவிட, அறிக்கை முதலமைச்சரின் கையில் இருந்தபோதே அது ஊடகங்களுக்கு கசிந்திருந்தது.

## அபத்தக் கருத்து

இப்போது அறிக்கை சபை உறுப்பினர்களின் கைகளுக்கும் வந்து விட்ட நிலையில் அது நிச்சயம் வெளிவந்தே தீரும்.

அவ்வாறானதொரு நிலையைத் தவிர்ப்பதற்காக, வெளிப்படைத்தன்மையுடனேயே இருக்கின்றோம் என்பதை நிரூபித்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை முதலமைச்சர் தவறவிடுவது அரசியல் ரீதியாக அவருக்கே பாதிப்பை ஏற்படுத்தும்.

அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவதால் வடக்கு மாகாண சபைக்கு அது களங்கத்தை ஏற்படுத்தும் என்ற முதலமைச்சரின் கருத்து அபத்தமானது.

ஏனென்றால், வடக்கு மாகாண சபையின் புனிதத்தன்மைக்கு அதன் உறுப்பினர்களும், அமைச்சர்களுமே பொறுப்பு. அந்த எதிர்பார்ப்பே தமிழ் மக்களிடம் இருந்தது.

விசாரணை அறிக்கை முற்றிலும் சரியானதாக இருந்தால், நடந்துள்ள தவறுகள் அனைத்தும் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். எங்கெங்கு தவறுகள் நடந்துள்ளன என்பதை அவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

தவறுகளையும், அறிக்கைகளையும் மூடி மறைக்கின்றபோதுதான், அது மேலும் மேலும் விஸ்வரூபம் எடுக்கும்.

தவறுகளைக் களைவதற்கான ஆரம்ப நடவடிக்கையை எடுக்காது போனால், வடக்கு மாகாணசபை மேலும் மேலும் தலைகுனிவுகளைச் சந்திக்கும். அது, ஆளுநர், மத்திய அரசின் தேவையற்ற தலையீடுகளுக்கும் வழி வகுக்கும்.

தவறு செய்தவர்கள், வெளிப்படுத்தப்படுவார்கள் என்ற அச்சம் பொதுவாழ்வுக்கு வரும் அனைவருக்கும் இருக்க வேண்டும். அப்போது தான், அவர்கள் நிலை மாறாமல் செயற்படுவார்கள்.

தவறுகள் ஒளிக்கப்படும் என்ற நிலையை முதலமைச்சர் நீடிக்க அனுமதித்தால், அது நேர்மையான, வெளிப்படையான, ஊழலற்ற ஆட்சி என்ற எதிர்பார்ப்பைக் கொண்டுள்ள மக்களுக்கு பேரிடியாகவே அமைந்து போகும்.

முதலமைச்சரைப் பொறுத்தவரையில், இந்த விவகாரத்தில் முடிவுகளை எடுப்பதில் நிறையவே யோசிக்கிறார்.

அவர் எடுக்கக்கூடிய முடிவுகள் ஒவ்வொன்றும் பின் விளைவுகளைத் தரக் கூடியவையே. எனவேதான், அவர், சரியான முடிவை எடுப்பதற்கு குழப்பமான சூழ்நிலைகள் பலவற்றைத் தாண்ட வேண்டிய நிலையில் இருக்கிறார்.

சுருங்கச் சொல்லின், குற்றஞ்சாட்டப்பட்ட அமைச்சர்களை விட, திரிசங்கு நிலையில் இருப்பது முதலமைச்சர்தான்.

*நன்றி: தமிழ்வின்.*

## நடக்காத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவமே நடக்கவில்லை என பிரதேசத் தைச் சேர்ந்த பதினொரு பொது அமைப்புகள் கடும் கண்டம் தெரிவித்து முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளன.

அத்தோடு பாரதிபுரம் பாடசாலையில் அக்காலப்பகுதியில் மேற்படி விசாரணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்ட விடயம் போன்ற சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை என்றும், குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை, உண்மைக்குப்புறம்பானவை என்றும் தெரிவித்துப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தற்போதைய மற்றும் முன்னாள் செயலாளர்கள் கையொப்பம் இட்டுக் கடிதம் ஒன்றை முதலமைச்சருக்கு அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் பொது அமைப்புக்கள் முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு :-

தங்களால் வடக்கு மாகாண சபை அமைச்சர்களின் செயற்பாடுகளை ஆராய நியமிக்கப்பட்டிருந்த விசாரணைக்குழு அறிக்கையில் கிளிநொச்சி பாரதி வித்தியாலய முன்னாள் அதிபர் பெ.கணேசன் மீது பாலியல் குற்றச்சாட்டு முன்னாள் ஆசிரியர் ஒருவரால் முன்வைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் குற்றசாட்டை பாரதி வித்தியாலயத்தில் கல்விகற்கும் எமது பிள்ளைகளின் சார்பாக, அவர்களின் பெற்றோர்கள் சார்பாக, கிராம மட்ட அமைப்புகளாகிய நாங்கள் வன்மையாக மறுக்கின்றோம். பொய்யான இக்குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

குறித்த ஆசிரியை தனது பணிக்காலத்தின் போது முன்பிருந்த ஓய்வுப்பெற்ற அதிபரின் தூண்டுதலால் பாடசாலை செயற்பாடுகளுக்கு இடையூறு செய்தமையோடு, பாடசாலை நிர்வாகத்திற்கும் இடையூறு விளைவித்தமையினாலும் சட்டத்திட்டங்களை உதாசீனம் செய்தமையினாலும் இவரை பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளாரிடம் பாடசாலை அபிவிருத்திக் குழுவினால் கோரிக்கை விடுத்திருந்தோம்.

இதன் காரணமாக அவர் இங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார். இதன் நிமித்தம் கோபமடைந்து பழிவாங்க எண்ணிய குறித்த ஆசிரியை அதிபருக்கு எதிராகவும் பாடசாலைக்கு எதிராகவும் செயற்பட எண்ணி பொய்யான குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருக்கின்றமையை நாங்கள் தற்போது மூன்று வருடங்களின் பின் இவ்வறிக்கையின் ஊடாகவே அறிய முடிகிறது.

இவ்வாறான ஒருசம்பவம் இப்பாடசாலையில் நடந்திருந்தால் கிராம மட்ட அமைப்புகள் இது குறித்து சட்ட நடவடிக்கை எடுத்திருப்போம் என்பன சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அத்தோடு தனி நபர்கள் மீதும் குறித்த சமூகத்தின் மீதும் இவ்வாறு அவதூறு பரப்புவது அடிப்படை மனிதஉரிமைமீறல் என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

எனவே, எமது பாடசாலையில் பாலியல் தொந்தரவு செய்யப்பட்டது என்ற அபாண்டமான குற்றச்சாட்டு விசாரணைக் குழுவின் அறிக்கையின்படி ஊடகங்களில் செய்திகளாக வெளியிடப்பட்டன. இது எமது முன்னாள் அதிபரையும், எமது சமூகத்தையும் மிகவும் அவமானப்படுத்தியுள்ளது. இது எமக்கு வேதனையை அளிக்கிறது. எனவே இவ்வறிக்கை முடிவுகள் குறித்து எமது கண்டனத்தையும் அதிருப்தியையும் இத்தால் தெரிவிக்கின்றோம். - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரதிபுரம் வடக்கு, தெற்கு, மத்தி கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பாரதிபுரம் சனசமூக நிலையம், மலையாளபுரம் தெற்கு, வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிருஷ்ணபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், விவேகானந்தநகர் மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கம், மலையாளபுரம் வடக்கு திருவள்ளுவர் சனசமூக நிலையம், மலையாளபுரம் வரசித்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை, கிருஷ்ணபாரதி முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனசபை ஆகிய கிராம மட்ட பொது அமைப்புகள் சார்பில் ஒப்பமிட்டு இக் கடிதம் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (உ)

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து வருகின்றார் என அறியவந்தது.

நேற்று பதினைந்துக்கும் மேற்பட்ட மாகாணசபை உறுப்பினர்களுடன் அவர் தொலைபேசியில் இவ்விடயம் தொடர்பாக உரையாடிக் கருத்துக் கேட்டார் எனச் சபைவட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பாக, அமைச்சர்களுக்கு எதிராக ஏற்கனவே குற்றம் சுமத்திய ஆளும் தரப்பு உறுப்பினர்களின் நிலைப்பாட்டை அறிவதிலேயே முதல்வர் சிரத்தை காட்டியிருக்கின்றார்.

"மேற்படி குழுவின் அறிக்கை தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? குற்றம் இழைத்தவர்கள் என்று அறிக்கையில் கூறப்படும் இருவரை மட்டும் மாற்றுவதா அல்லது நான்கு அமைச்சர்களையும் மாற்றுவதா?" - என்ற சாரப்பட முதல்வரே தொலைபேசி அழைப்பு எடுத்துச் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிடம் விசாரித்தார் எனவும் தெரியவந்தது.

"முதல்வரின் கேள்வியின் அடிப்படையில் பார்த்தால் அவர் நான்கு அமைச்சர்களையுமே ஒட்டுமொத்தமாக மாற்றப் போகின்றார் என்பது போலவே தோன்றுகின்றது. புதன்கிழமை இவ்விடயம் தொடர்பாக மாகாண சபையில் நடைபெறும் விசேட விவாதத்துக்குப் பின்னர் அத்தகைய முடிவு ஒன்றை முதல்வர் வெளியிடக்கூடும்." -- என அவருடன் நேற்றுத் தொலைபேசியில் உரையாடிய மாகாணசபை உறுப்பினர் ஒருவர் 'காலைக்கதிர்'க்குத் தெரிவித்தார். (உ)

## இன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேச்சாளர் பிரியந்த ஜெயகொடி குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களில் ஒருவர் பொதுபல சேனா அமைப்பை சேர்ந்தவர். அவர் நான்கு தீ வைப்புச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கின்றார்.

அத்துடன், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மூன்று வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் புத்தரை சமூக வலைத்தளங்களில் நிந்தனை செய்யும் வகையில் செய்திகளைப் பரப்பியவர் என்றும், மற்றைய இருவரும் சொத்துக்களைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவுத் திணைக்களத்தை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அவற்றுக்கான சாட்சியங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன எனக் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கிடைத்த ஆதாரங்களுக்கு அமைய கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படுவார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஊடகவியலாளர் கீத்நொயார் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வு பிரிவு நீண்ட நேரம் விசாரணை மேற்கொண்டது.

இந்த சம்பவம் தொடர்பில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள மேஜர் உட்பட அதிகாரிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கமைய கோட்டாபய ராஜபக்ஷ குற்ற விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

கடந்த 5ஆம் திகதி 4 மணித்தியாலத்திற்கும் அதிகமான நேரம் கோட்டாபய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் மீண்டும் அடுத்த வாரம் கோட்டாபய விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளார் எனக் குற்ற விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை உட்பட பல கொலைகள் தொடர்பில் சூழ்ச்சி செய்த குற்றச்சாட்டின் கீழ் கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் நாள்களில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார் எனக் குற்ற விசாரணைத் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதில் குறிப்பாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற கொலை மற்றும் குடிதண்ணீர் கோரி அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ரத்துபஸ்வெல மக்களுக்கு எதிராக இராணுவத்தை ஈடுபடுத்தி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வைத்துக் கொலை செய்தமை போன்ற சம்பவங்கள் கோட்டாபயவின் நேரடித் தலையீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குற்றப் புலனாய்வுப் பிரிவினால் உறுதி செய்யப்பட்டுள்ளதாம். (உ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிக்கையாளர் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணம் தொடர்பாகச் சமர்ப்பிக்கும் அறிக்கை குறித்தே விவாதிக்கப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளராக இருந்த மோனிகா பின்ரோ கடந்த 2016 ஏப்ரல் 29ஆம் திகதி தொடக்கம் மே 7ஆம் திகதி வரை இலங்கையில் பயணம் மேற்கொண்டு ஆய்வுகளை நடத்தியிருந்தார்.

இது தொடர்பான அறிக்கையை நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பான தற்போதைய ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் டியேகோ கார்சியா சயன் கவுன்ஸில் சமர்ப்பிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வித்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடைபெறவுள்ளன.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மற்றும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் ஆகியோர் இந்த நீதி ஆயத்தில் இடம்பெறுகின்றனர்.

சட்டமா அதிபரின் கோரிக்கைக்கு அமைய பிரதம நீதியரசர் பிரியசத் இந்த நீதிபதிகள் குழாமை நியமித்திருந்தார்.

வித்தியாவின் கொலை தொடர்பில் 12 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 பேரில் 9 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் நிகழ்கால மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டமொன்றை யாழ் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடத்த வுள்ளார்.

இக்கூட்டத்தில் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்ட அரச அதிபர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாகாண முதலமைச்சர், மாகாணசபை உறுப் பினர்கள், திணைக்கள உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர் கலந்துரையாடுவார். அவர்களுடன் சிவில் சமூகத்தினரையும் ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாட இருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளது.

இந்தக் கப்பலுடன் 360 அமெரிக்கக் கடற்படை வீரர்களும் வருகைதந்துள்ளனர்.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் நோக்கில் இந்த கப்பல் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அனர்த்தம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் இலங்கைப் படையினருடன் இணைந்து அமெரிக்கப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பலசேனாவின் உறுப்பினர் என அடையாளம் காணப்பட்டிருக்கின்றார் எனப் பொலிஸாரை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற ஒருவரே ஒவ்வொரு தடவையும் சைக்கிளில் வந்து இந்த நான்கு வர்த்தக நிலையங்களுக்கும் தீவைத்துச்சென்றார் என்பதை சி.சி.ரி.வி. கமரா பதிவு மூலம் புலனாய்வாளர்கள் கண்டறிந்து அவரைக் கைது செய்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## செல்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தனர் என முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டபோதே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

## தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு :-

முதலமைச்சரே தாம் பங்குபற்றாத ஒரு நிகழ்வைத் தாம் பங்குபற்றிய நிகழ்வு எனக் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று (ஞாயிற்றுக்கிழமை) பச்சிலைப்பள்ளி தமிழரசுக் கட்சிப் பிரதேசக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய மாகாணசபை உறுப்பினர் அரியரத்தினம், தாம் அளிக்காத சாட்சியத்தை தாம் அளித்தமை போன்று விசாரணைக்குழு குறிப்பிட்டிருக்கின்றது என விசனம் தெரிவித்திருக் கின்றார்.

குழுவின் விசாரணை அறிக்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வாசகங்கள், அதிகாரிகளின் பெயரைச் சுட்டும் விதங்கள் போன்றவை ஓய்வுபெற்ற இரு நீதியரசர்கள் மற்றும் மூத்த நிர்வாக அதிகாரியைக் கொண்ட ஒரு குழுவின் தகைமை நிலையில் இருந்து பயன்படுத்தப்பட்டவைபோல் தெரியவில்லை.

ஓர் அதிபரை அவரின் முழுப் பெயரில் சுட்டுவதை விடுத்து 'வரதன் மாஸ்டர்' என்று தீர்ப்பில் குறிப்பிடுகின்றமை ஏற்புடையதன்று.

யூனியன் கல்லூரியில் மூன்றரை ஆண்டுகள் கல்வி கற்ற ஒருவரை சொற்பகாலம் அங்கு கல்வி பயின்றவர் என்று தீர்ப்பளிக்கும் நிலையில்தான் இக் குழு உள்ளது.

விசாரணைக்குச் சமுகம் தந்த மாகாண அமைச்சர்களை அதிகாரிகள் போல நடக்கவேண்டும் என்று விசாரணையாளர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். அமைச்சர் குருகுலராஜா அதற்கு இடமளிக்கவில்லை. அதனால் தங்களுக்கு ஏற்பட்ட தனிப்பட்ட கோபத்தைப் பழிதீர்க்கவே இத்தகைய முடிவைக் குழு வழங்கியிருக்கின்றது.

ஏதோ ஒரு மறைமுக நிகழ்ச்சிக்குத் திட்டத்துக்கு அமைய இந்தக் குழு செயற்பட்டிருக்கின்றது. முதலமைச்சரைப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்று திட்டம் தீட்டிச் செயற்பட்ட தரப்பின் எடுப்பார் கைப்பிள்ளையாகியிருக்கின்றது இக்குழு என்றே கருத வேண்டியுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கைக்காக இரண்டு அமைச்சர்களையோ அல்லது நான்கு அமைச்சர்களையுமோ நீக்கினால் அந்த நால்வரையும் நியமித்து அமைச்சரவையை இயக்கிய முதல்வரும் கூட கூட்டுக் குற்றப் பொறுப்பாளியாக வேண்டியவராகி விடுவார்.

மாகாணங்களுக்குச் சரியாக அதிகாரம் பகிரப்படவில்லை. அதனால் அதிகாரங்களைச் சரிவரப்பிரயோகித்து விடயங்களை ஒப்பேற்ற முடியாத கையறு நிலையிலேயே அமைச்சர்கள் உள்ளனர்.

இதனால் அத்தகைய விடயங்களை அமைச்சரவைத்தீர்மானமாக எடுத்து, அவற்றை அவர்கள் நடைமுறைப்படுத்தியிருக்கின்றார்கள்.

அப்படி அந்த விடயங்களை

பக்கம் 03 >>

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டெபோனயர் என்ற இலங்கைப் பெண்ணே வெற்றி பெற்றுள்ளார். இவர் 47,213 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் 9,877 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

தங்கம் டெபோனயர் இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த பெண் ஆவார்.

தங்கம் டெபோனயரின் தந்தை ஒரு இலங்கைத் தமிழர். அவரது தாயார் பிரித்தானிய வெள்ளையினப் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# நாடில்லை என்றால் தமிழர் நாதியற்றவர்கள் அல்லர்!

## மனோ அமைச்சர் காட்டம்



கொழும்பு, ஜூன் 12

நாடு இல்லை என்பதற்காக தமிழர்களை நாதியற்றவர்கள் என்று நினைத்து விட வேண்டாம் என்று தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறுபான்மையினராக வாழும் தமிழர்கள்சற்று அசந்துவிட்டால், அவர்களை ஆட்கொண்டு விடுவார்கள்.


தாய்மொழி, கலாசாரம், இனம், பண்பாடு, வரலாற்றை மறந்துவிட்டுத்தான் நாட்டில் ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்றால், அப்படியொரு ஒற்றுமை எமக்கு வேண்டாம்.

நாடு இல்லை என்பதற்காக தமிழர்களை நாதியற்றவர்கள் என்று நினைத்துவிட வேண்டாம்.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்ட போது, தமிழகத்தில் செம்மொழி மாநாடு நடத்தப்பட்டது. தமிழ் மொழியை வாழ வைக்க வேண்டுமானால் தமிழர்கள் வாழ வேண்டும்.

தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட போது கண்ணை மூடிக் கொண்டு இருந்து விட்டு, பின்னர் செம்மொழி மாநாட்டை நடத்துவதால் மட்டும் தமிழ்மொழி வாழ்ந்து விடாது.-என்றார். (எ)

## நாளை மின் தடை



உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை

யாழ்.பிரதேசத்தில்- தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குளாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக் கேணி இராணுவமுகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்-

வவுனியா பிரதேசத்தில்- தெற்கிலுப்பைக் குளப் பகுதியிலும்

மன்னார் பிரதேசத்தில் -

பள்ளிமுனை NHDA, மன்னார் நகரின் ஒரு பகுதி, காகில்ஸ் பூட்சிற்றி, பெரிய நீலாச்சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, அடம்பன், மினுக்கன், டாப்பாமோட்டை, பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல், குருவில், பரப்புக் கடந்தான், ஆண்டான் குளம், கண்ணாட்டி, பள்ளிவாசல்பிட்டி, அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)



## வவுனியா வீட்டில் தீ விபத்து;

### பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசம்!

*வவுனியா, ஈரப் பெரியகுளம் ரயில் நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள வீடு ஒன்று நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் தீக்கிரையானதில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன என்று ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.*


*இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-*

*ஈரப்பெரியகுளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் அறை முன்னர் வியாபார நிலையமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. தற்போது வியாபாரம் மேற்கொள்ளப்படாது வீட்டுப் பொருள்கள் வைப்பதற்கான இடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த நிலையிலேயே அந்த வீட்டு அறை தீப்பற்றி எரிந்துள்ளது. தீயைக் கட்டுப்படுத்த அயலவர்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் முயற்சித்த போதும் அது முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.*

*இதனால், அங்கு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், சைக்கிள் உட்பட வீட்டுத் தளபாடங்கள் பல தீயில் எரிந்து சாம்பலாகின. (எ-100)*

## நீண்டகாலத்துக்குப் பின் மன்னாரில் மின்தடை!

### விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்



மன்னார், ஜூன் 12

மன்னாரில் நீண்ட காலத்துக்குப் பின்னர் மீண்டும் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது. இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மின்சார சபை அதிகாரிகளால் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் மின் தடை ஏற்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக இரவு, பகல் என்று பாராது திடீரென மின் தடைப்படுகின்றது. மின்சாரம் தடைப்பட்டவுடன் மன்னார் மின்சார சபையின் தொலைபேசி இலக்கத்துக்கு மக்கள் தொடர்பை ஏற்படுத்தினால் அது தொடர்பு செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது.

எனினும், தொலைபேசி எடுக்கப்பட்டால் பதிலளிக்கும் பணியாளர் மன்னாரில் மின் தடைப்பட்டால் யாழ்ப்பாண அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் என்ற பதிலை கூறிவிட்டு தொலைபேசி அழைப்பைத் துண்டித்து விடுகிறார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது முஸ்லிம் மக்கள் புனித நோன்பு கடமைகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் அவர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, மன்னார் மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற மின் தடையை நிவர்த்தி செய்ய மன்னார் மின்சார சபை அத்தியட்சகர் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## மக்களைக் குழப்புகின்றனர் நிராகரிக்கப்பட்ட முன்னாள் அரசியல்வாதிகள்!

### இவ்வாறு கூறுகிறார் சாந்தி எம்.பி.



சில தோற்றுப்போன அல்லது மக்களால் நிராகரிக்கப்பட்ட முன்னாள் அரசியல்வாதிகள் மக்களைக் குழப்புகின்ற வகையில் பிரசாரங்களை மேற்கொள்வதால் தான் மக்கள் கூட்டமைப்பை விமர்சிக்கின்ற ஒரு நிலை காணப்படுகிறது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது மக்கள் மத்தியில் எழுந்துள்ள விமர்சனங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

என்னைப் பொறுத்த வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான விமர்சனம் என்பது மக்கள் விமர்சிக்கின்றார்களா அல்லது மக்களை விமர்சிக்க வைக்கின்றார்களா எனச் சந்தேகம் எழுகிறது.

ஏனென்றால் இந்தக் கூட்டமைப்பு மீது மக்கள் நம்பிக்கை வைத்தமையால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், கூட்டமைப்பு அதில் இருந்து நழுவிப் போகவில்லை. அத்துடன் துரோகம் செய்யவில்லை என்பதும் உண்மை.

எங்கள் மக்கள் ஏற்றுக்கொள்ளாத, எங்களுடைய மக்களுக்கு திருப்தியளிக்காத எந்தவொரு தீர்மானத்தையும் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளாது என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா அடிக்கடி கூறுவார்.

இந்த ஆட்சி மாற்றத்தின் பின்பு தான் தமிழர்களைப் பொறுத்த வரையில் இரண்டு காரியங்கள் கைகூடியிருக்கின்றன.

முதலாவது, இலங்கையின் இரண்டு பெரும்பான்மை பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து இருப்பது. இரண்டாவது சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை ஊடாக நடவடிக்கைகளை எடுத்தது. இதனை மக்கள் நன்றாக விளங்கிக் கொண்டு சரியாகக் கையாள வேண்டும்.

இதனைக் குழப்புகின்ற வகையில் சில தோற்றுப் போன அல்லது மக்களால் நிராகரிக்கப்பட்ட முன்னாள் அரசியல்வாதிகள் மக்களைக் குழப்புகின்ற வகையில் பல பிரசாரங்களை மேற்கொள்வதால் தான் மக்கள் கூட்டமைப்பை விமர்சிக்கின்ற ஒரு நிலை காணப்படுகிறது.' -என்றார். (எ-100)



இணுவில் கந்தசுவாமி கோவிலின் உலகப் பெருமஞ்சம் நேற்று முன்தினம் வீதியுலா வந்தபோது....

### மெதகம பகுதியில் அதிர்ச்சி!

# பாடசாலை மாணவன் ஹெரோயினுடன் கைது!

பிபில மெதகம பிரதேசத்தில் 400 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் பாடசாலை மாணவரொருவன் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


மெதகம பொல்கஹவெல பிரதேசத்தில் பொலிஸார், வாகனங்களைச் சோதனையிடும் போது இந்த மாணவன் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளான்.

அவனிடம் வாகன அனுமதிப் பத்திரம் இல்லாமையினால் அவனைத் தாங்கள் சோதனைக்குட்படுத்தினர் எனவும் இதன் போதே ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மாணவனின் காற்சட்டைப் பையிலிருந்து 100 மில்லிகிராம் ஹெரோயின் அடங்கிய 04 பக்கெட்டுக்கள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் கூறினர்.

பிபில மெல்லகம பிரதேசத்தின் பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 17 வயது மாணவனொருவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளான்.

# நல்லூரில் இந்து சமய அறநெறி கல்வி விழிப்புணர்வு ஊர்வலம்







ஊர்வலச் செய்தி 5ஆம் பக்கத்தில்...




# நிதிமோசடிகளைக் கண்டறிவதற்கு புதிய புலனாய்வுப் பிரிவு உதயம்!

## நிதி அமைச்சர் மங்கள சமரவீர தகவல்



கொழும்பு, ஜூன் 12

அரச நிதி மையங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் மோசடி, முறைகேடுகளைக் கண்டுபிடித்து அறிக்கை சமர்ப்பிக்க புதிய புலனாய்வுப் பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

விசேட பிரிவால் பெறப்படும் தகவல்கள் நிதி அமைச்சர் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் வகையில் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான விசேட புலனாய்வுப்பிரிவுகள் பல வெளிநாடுகளில் இயங்கி வருகின்றன. குறிப்பாக சிங்கப்பூர் போன்ற நாடுகள் தங்கள் நாட்டில் இடம் பெறும் நிதி மோசடிகளைக் குறைத்துக் கொள்வதற்காக இவ்வாறான புலனாய்வுப் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது இலங்கையிலும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு இயங்கி வருகின்றது. அங்கு ஏதாவது ஒரு மோசடி தொடர்பில் முறைப்பாடு கிடைத்தால் மாத்திரமே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும், அரச நிதி நடவடிக்கை தொடர்பில் எந்த நேரமும் அவதானத்துடன் இருப்பதற்கு புலனாய்வுப் பிரிவு ஒன்று அவசியமாகியுள்ளது.

பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் லொரன்ஸ் மாபியா என்ற பெயரில் விசேட பொலிஸ் பிரிவு இயங்கியது. அத்துடன், அமைச்சில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் பலவீனங்கள் ஜனாதிபதிக்கு அறிக்கையிடப்பட்டன.

எனினும், அது அரசியல் கோபங்களைத் தீர்த்துக்கொள்வதற்காக ஜனாதிபதி பயன்படுத்திக் கொண்டதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டது. எப்படியிருப்பினும் புதிய பிரிவில் நிதிக் குற்றம் தொடர்பில் விசேட அறிவுடைய பொலிஸ் அதிகாரிகள், வங்கி நடவடிக்கை மற்றும் நிதி சந்தை நடவடிக்கை தொடர்பில் விசேட அறிவுடைய பலரின் உதவி கிடைத்துள்ளது.

அத்துடன், இதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் விசேட ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஏ)

# தமிழர் சார்பு அரசியல்வாதி பிரிட்டிஷ் தேர்தலில் தோல்வி

பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில், தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவராக இருந்த ஜேம்ஸ் பெரி தோல்வியடைந்துள்ளார்.

கொன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் இவர், கிங்ஸ்டன் அன் சேர்பிடன் தொகுதியில் தொகுதியில் போட்டியிட்டிருந்தார்.

லிபரல் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சேர் எட் டேவியிடம் ஜேம்ஸ் பெரி 4,124 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

சேர் எட்டேவி 1997ஆம் ஆண்டு தொடக்கம், 2015ஆம் ஆண்டு வரை பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினராக பதவியில் இருந்தவர்.

அப்போது இலங்கை அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்து வந்தவர். குறிப்பாக மனித உரிமைகள் பதிவுகள் மற்றும் தமிழ் மக்களை நடத்தும் விதம் குறித்து இவர் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான கடுமையான கருத்துக்களை முன்வைத்து வந்தார். 2015 தேர்தலில், கொன்சர் வேட்டிவ் கட்சியின் ஜேம்ஸ் பெரியிடம் தோல்வியடைந்த சேர் எட்டேவி இப்போது பெரியைத் தோற்கடித்துள்ளார்.

# வீடு தீக்கிரை!

பலாங்கொடை, பின்னவளை பிரதேசத்தில் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரைக் கொன்றவர் எனக் கருதப்படும் சந்தேக நபரின் வீட்டைச் சுற்றி வளைத்த ஊர்மக்கள் அதனைத் தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

சந்தேக நபர் ஊரைவிட்டு ஓடியமையை அடுத்து கோபம் அடைந்த பிரதேச மக்கள் அவரின் வீட்டைக் கொளுத்தியுள்ளனர்.

இவ் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி சில நாள்களுக்கு முன்னர் வயலில் இருந்து வீட்டுக்கு வரும் வழியில் வெட்டிக்கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

# மின்சாரம் தாக்கி மாது மரணம்!

வெலிகம, உடுபில, மிரிஸ்ஸ பிரதேசத்தில் பெண்ணொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வீதியில் விழுந்து கிடந்த மின் விநியோகக் கம்பியை அகற்றச் சென்றபோதே இவ்வாறு அவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்துள்ளவர் அந்தப் பிரதேசத்தை சேர்ந்த 63 வயதான மாது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# நெல்லியடியில் சடலம் மீட்பு!

நெல்லியடி, ஜூன் 12

நெல்லியடிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய வாய்க்கால் ஒன்றில் இருந்தே இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த 53 வயதான ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, சடலத்தின் அருகில் இருந்து விஷப் போத்தல் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (உ)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931362
follow us cnrworldwideexpress